RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 26 ஏப்ரல் 2024 இதழ்:- 48

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
office@nishanthanlaw.onmicrosoft.com
Fax 1-800-878-1348
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

# காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளில் சிறிய முன்னேற்றமும் ஏற்படவில்லை - அமெரிக்கா

2023இல் இலங்கையில் அரசாங்கத்தின் அதிகாரிகள் சார்பில் எவரும் காணாமல் போகச் செய்யப்பட்டதாக அறிக்கைகள் எவையும் கிடைக்கவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளதுடன் ஒக்டோபர் இறுதிவரை எவரும் காணாமல் போகச் செய்யப்பட்டதாக தனக்கு (24ம் பக்கம் பார்க்க)



**ஈழநாடு:-**
**மின்னிதழில் வாசிக்க**
**eelanadu.ca**

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Life & Health Insurance Advisor
Dir: 416 528 1407
gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

# பிரம்டன் நகரில் தமிழினப் படுகொலை நினைவுச் சின்னம்! கனடியத் தூதுவரை வரவழைத்து அதிருப்தி தெரிவித்த சிங்கள அரசு!



கனடாவின் பிராம்டன் (Brampton) நகரில் இலங்கையின் தமிழ் இனப்படு கொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கொழும்பில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகரை வரவழைத்து தனது அதிருப்தியை தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (3ம் பக்கம்)

**க.அருந்தவபாலன் எழதுகிறார்**

## தூண்டில் போடும் விக்கியரும் தூர ஓடும் தலைவர்களும்

## வங்குரோத்து நாட்டை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகள்

கழுத்துறையில் ஒரு சுற்றுலாப் பயணி. அவர் ஒரு வெள்ளைக்காரரர் ஒரு தேநீர்க்கடையில் வடை சாப்பிடுகிறார்.அவரை கடைக்குள் உபசரித்து வடையோடு (19ம் பக்கம் பார்க்க)



## கோட்டா பயன்படுத்திய வாகனம் ஏற்படுத்தியுள்ள சர்ச்சைகள்!

மக்களின் ஜனாதிபதி என்ற கோஷங்களோடு 69 இலட்சம் வாக்குகள் பெற்று கோட்டாபய அரியணை ஏறியவர் ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதிகளுக்கு முன்னுதாரணமாக மிக எளிமையான (17ம் பக்கம் பார்க்க)

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக
உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE
TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)


“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

## www.AgentSiva.com

*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




21 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence /Morningside

**Scarborough** $447,000
Bedrooms: 3 Washrooms: 2
Large Open Balcony Amazing View


### Fanshawepark / Highbury Ave

**London** $720,000
Bedrooms: 3+2 Washrooms: 2
bungalow with an inground pool


### Kennedy Rd & Bovaild Dr. E

**Brampton** $1,100,000
Bedrooms: 4+1 Washrooms: 3
Recently renovated


### Dixie Rd & Bovaird Dr E


**Brampton** $1,349,000
Bedrooms: 4+2 Washrooms: 4
Fully finished legal basement

### Pine Ridge Dr & Farley Dr

**Guelph** $1,199,900
Bedrooms: 3+1 Washrooms: 4
finished basement

### Meadowvale / 401

**Scarborough** $1,898,000
Bedrooms: 4+3 Washrooms: 5
fully fin.basement with sep entrance

### Tenth Line & 19th Line

**Stouffville** $1,699,000
Bedrooms: 4+3 Washrooms:7
Newly Built under a year old home


### Leslie St & Green Ln

**East Gwillimbury** $1,899,900
Bedrooms: 4 Washrooms: 4
Minutes to Transit & Go, Hwy 404

### Bur Oaks / Markham Rd.


**Markham** $539,900
Bedrooms: 1 Washrooms: 1
Newer Modern Condo Building

### Annland & Liverpool


**Pickering** $849,900
Bedrooms: 3 Washrooms: 2
This newly renovated home

### Steels Ave/Mississauga Rd



**Brampton** $2,250
Bedrooms: 3 Washrooms: 2
Brand new legal basement

### Church & Rossland


**Ajax** $1,600
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept Living & Kitchen

### Grandview St / Conlin Rd


**Oshawa** $3,500
Bedrooms: 4 Washrooms: 3
Freshly Renovated Home In Taunton

### Mccowan And Ellesmere


**Scarborough** $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Close to Transit, STC, Library

*Looking for more house?*

## www.AgentSiva.com

WILL BRING THE BEST RESULTS!

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
**105 DINSDALE DR**
**WOODBRIDGE - ON**
**L4H 2M4 - CANADA**

**416 841 9600 / 905 653 3000**
**eelanadu1993@ gmail.com**

# பிரம்டன் நகரில் தமிழினப் படுகொலை நினைவுச் சின்னம்!

## கனடியத் தூதுவரை வரவழைத்து அதிருப்தி தெரிவித்த சிங்கள அரசு!

கனடாவின் பிராம்டன் (Brampton) நகரில் இலங்கையின் தமிழ் இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நினைவுச்சின்னம் அமைக்கும் திட்டம் தொடர்பாக இலங்கை அரசாங்கம் கொழும்பில் உள்ள கனேடிய உயர் ஸ்தானிகரை வரவழைத்து தனது அதிருப்தியை தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ் இனப்படுகொலை நினைவிடத்திற்கான இறுதி வடிவமைப்பு இந்த ஆண்டின (2024) தொடக்கத்தில் பிராம்டன் நகர சபையால் அங்கீகரிக்கப்பட்டது. அத்தோடு இனப்படுகொலையில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக அமைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து தகர்க்கப்பட்டதன் பின்னரே பிராம்டனில் நினைவுச் சின்னம் கட்டப்பட்டது.




இந்நிலையில் இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களின் நினைவுச் சின்னம் பற்றிய செய்தி இலங்கை அதிகாரிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்தே இலங்கையின் 'தீவிர கவலையை' தெரிவிக்க கொழும்பில் உள்ள ஒட்டாவாவின் தூதுவரை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி வரவழைத்ததாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன் போது முன்மொழியப்பட்ட நினைவுச்சின்னம் குறித்து இலங்கை வெளியுறவு அமைச்சு தனது 'வலுவான கவலையை' வெளிப்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களை நினைவு கூரும் வகையில் மே 18 அன்று தமிழர்கள் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழரசுக்கட்சி தொடர்பான வழக்கு ஒத்தி வைப்பு!





இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிர்வாகத் தெரிவு தொடர்பான வழக்கு எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.

இந்த வழக்கு 24 ஏப்ரல் 2024 புதன் கிழமை திருகோணமலை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிமன்ற வழக்கு விசாரணையின் பின்னர் இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே வழக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக சட்டத்தரணி கே.வி. தவராசா தெரிவித்திருக்கிறார். இதன் போது அவர் மேலும் கூறுகையில்

இவ்வழக்கிற்கு 07 எதிராளிகள் பெயரிடப்பட்டுள்ள நிலையில் 2ஆம், 4ஆம் எதிராளிகளான தலைவராக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஶ்ரீதரன், செயலாளராக தெரிவான ச.குகதாசன் ஆகியோர் சார்பாக ஆஜரானேன். சுமார் மூன்று மணி நேரங்கள் இவ்வழக்கு விவாதிக்கப்பட்டு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 29ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கு பொதுநலன் கருதி முடிவுக்கு கொண்டு வர வேண்டும். கட்சி யாப்பை மீறியதாக இங்கு எதுவும் சொல்லப்படவில்லை. குறிப்பாக, சில விதிகளில் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வழக்கு தொடர்ந்தால் அதனை வெற்றி கொள்ளலாம். ஆனால் காலம் செல்லும். இதனால் வழக்கை காலம் சென்ற நிலையில் வெற்றி கொண்டால் தோல்வியாகவே கருதப்படும்.

வழக்காளி கோரும் நிவாரணத்தை வழங்க தயாராக இருக்கிறோம். எங்களுடைய நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இதனை வழக்காளி தனது சட்டத்தரணி ஊடாக தெரிவிக்க வேண்டும். வழக்கை வாபஸ் பெற வேண்டும் என எனது வாதத்தை நீதிமன்றத்தில் முன் வைத்தேன் என்றார்.

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

### ஈழநாடு வாசகர்களின் கவனத்திற்கு!

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் அச்சுப் பத்திரிகையாகவும் eelanadu.ca என்ற மின்னஞ்சல் மூலமாகவும் வாசிக்கலாம். இப்போது முகநூல் (Facebook) வாயிலாகவும் வாசிக்கலாம்.என் இனிய வாசகர்களே! நீங்கள் உங்கள் முகநூல் (Facebook) மூலமாக இதனை உங்கள் நண்பர்களுக்குப் பகிருமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

ஈழநாடு பத்திரிகை சம்பந்தமான விமர்சனங்களை எழுதுங்கள். வாசகர்களின் எதிர்பார்ப்புக்கள் என்ன என்பதை அறிந்து கொள்ள உதவும். நன்றி!

**எதிர்பாருங்கள்! காத்திருங்கள்! முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின் குழந்தைகளின் வாழ்வுக்காகவும் கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 13வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும் 28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை. தொடர்புகளுக்கு:- 416 841 9600**

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்



**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**

# உயிர்த்த ஞாயிறு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது எனது பொறுப்பல்ல - பேராயருக்கு கோத்தா பதிலடி



உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது அரசியல்வாதிகளின் பொறுப்பல்ல என கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் குற்றச்சாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதிலளித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களை கைது செய்ய கோட்டாபய ராஜபக்ச தவறி விட்டதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குற்றம் சாட்டியதற்கு பதிலளிக்கும் விதமாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமான குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு தவறி விட்டதாக கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை என் மீது குற்றம் சுமத்தியுள்ளார். ஆனால், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவது பொலிஸ், சட்ட மா அதிபர் மற்றும் நீதித்துறை அமைப்புக்களின் கடமையாகும்.

குறித்த சட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருவதோடு தாக்குதலுடன் தொடர்புடைய 93 பேருக்கு எதிரான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெறுவதற்கு பல மாதங்களுக்கு முன்னரே இலங்கை குற்றப்புலனாய்வு பிரிவினர் அதனுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அமைப்புக்களின் செயற்பாடுகளை விசாரித்து வந்தனர்.

எனினும், தாக்குதல் நடைபெற முன் அவர்களை கைது செய்ய குற்றப் புலனாய்வு பிரிவினர் தவறி விட்டனர்.

கர்தினால், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக என் மீது தொடர்ந்து குற்றம் சுமத்துவத்தை மக்கள் கவனமாக பார்க்க வேண்டும்.

முஸ்லீம் சமூகத்தினர் எனக்கு வாக்களிக்கவில்லை என்னை ஆதரிக்கவில்லை என்பது நன்கு தெரிந்த விடயம் இதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் தடை செய்யப்பட வேண்டிய எந்த அமைப்பிலும் நான் ஏன் ஆதரவாளர்களை வைத்திருக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நான் ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் நான் கர்தினாலை தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளவேயில்லை என கோட்டாபய தெரிவித்துள்ளார்.

## தமிழரசுக்கட்சியின் யாழ். நீதிமன்ற வழக்கு யூன் 20க்கு ஒத்தி வைப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் ஜீன் 20ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மாநாட்டுக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு தொடர்பான வழக்கு நேற்றைய வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஐந்தாவது எதிராளியான சண்முகம் குகதாசன் இன்றும் நீதிமன்றத்தில் ஆஜராகததால் திருகோணமலையில் அவரது சரியான முகவரிக்கு மீண்டும் அழைப்பு கட்டளை அனுப்புவதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன் போது முதலாம் மற்றும் மூன்றாம் எதிராளிகள் தரப்பு சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஸ்ரீ காந்தா தங்கள் தரப்பு கருத்துக்களை முன் வைக்க கால அவகாசம் கோரினார்.

இதனையடுத்து எதிராளிகள் தமது சமர்ப்பணங்களை முன் வைக்க அவகாசம் வழங்கி ஜீன் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

இதேவேளை இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணை கடந்த புதன்கிழமை இடம் பெற்றதை தொடர்ந்து வழக்கு எதிர்வரும் மே 31ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வேதனத்துடன், 3 மாதம் விடுமுறை வழங்குவதற்கு நாடாளுமன்றில் முன்மொழியப்பட்டுள்ளது.

இரா.சம்பந்தன் சுகவீனமுற்றிருப்பதால் அவருக்கு விடுமுறை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்த நிலையிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆதரித்துள்ளார். பொதுவாக சுகவீனமுற்றுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் விடுமுறையே சம்பந்தருக்கும் வழங்கப்பட்டுள்ளதே தவிர இது விசேட சலுகைகள் அல்ல.



# முதன் முதலாக இந்தியத் தேர்தலில் வாக்களித்த திருச்சி அகதி முகாமில் உள்ள இலங்கைப் பெண்!




நளினி (வயது38) திருச்சி கொட்டப்பட்டில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கின்றார். இவரது பெற்றோர் மண்டபம் முகாமில் வசித்த போது 1985இல் நளினி பிறந்துள்ளார். தற்போது தனது கணவருடன் கொட்டப்பட்டில் இலங்கைத்தமிழர் மறுவாழ்வு முகாமில் வசித்து வருகிறார்.

நளினி இந்தியாவில் பிறந்திருந்தாலும், பெற்றோர் இலங்கைத் தமிழர்கள் என்பதால் அவருக்கு கடவுச்சீட்டு, வாக்காளர் அடையாள அட்டை போன்றவை வழங்கப்படவில்லை. இந்நிலையில், மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த நளினி, இந்திய குடியுரிமை சட்டப்படி கடவுச்சீட்டு மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஆகியவற்றை நீதிமன்ற உத்தரவுப்படி பெற்றுள்ளார்.

இதையடுத்து, திருச்சி விமான நிலையம் வயலர்லெஸ் வீதியிலுள்ள எம்.எம் ஆரம்பப் பாடசாலை வாக்குச்சாவடி மையத்தில் நளினி 19 ஏப்ரல் 2024 முதன் முறையாக வாக்களித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருள் விநியோகத்தில் சிங்கக் கொடி கட்டிப் பறக்கும் கடற்படையினர்




இலங்கையில் போதைபொருள் கடத்தலில் கடற்படையினர் மும்முரமாகியுள்ளனர். ஏற்கனவே வடக்கின் ஊடாக முன்னெடுக்கப்படும் போதைபொருள் கடத்தலில் இலங்கை கடற்படை தொடர்புபட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை 19 ஏப்ரல் 2024 ரூபா 7.5 மில்லியன் பெறுமதியான 510 கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த போது கைது செய்யப்பட்ட 2 இலங்கை கடற்படை லெப்டினன்ட் கொமாண்டர்கள் உட்பட 04 பேரை ஏப்ரல் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு புதுக்கடை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதேவேளை கட்டானை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கடந்த 19 ஏப்ரல் 2024 வெள்ளிக்கிழமையன்று கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் போது இவரிடமிருந்து 800 கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இவர் ப்ளூமெண்டல் பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கில் மே மாத இறுதிக்குள் 60,000 பேருக்கு காணி உறுதி



மே மாத இறுதிக்குள் வடக்கில் 60 ஆயிரம் பேருக்கு காணி உறுதி வழங்கப்படும் என வடமாகாண ஆளுநர் திருமதி பி.எம்.எஸ். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார். யாழில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்த வருட இறுதிக்குள் மீள் குடியேற்ற நடவடிக்கை நிறைவு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி வழங்கியுள்ள பணிப்புரைக்கு அமைய, மீள்குடியேற்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. யாழ் மாவட்டத்தில் ஆயிரத்து 500 குடும்பங்களை சேர்ந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். அவர்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் விசேட கூட்டம் நடத்தப்பட வேண்டும். அத்துடன் ஏற்கனவே மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வீடுகளுக்கான மின்சார விநியோகம் தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன்.

இதேவேளை, வட மாகாணத்தில் காணி உறுதிப் பத்திரங்களை கைமாற்றும் செயற்பாடுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. உரித்து காணி உறுதிகளை வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமையை மே மாத நிறைவுக்குள் வடமாகாணத்தில் 60 ஆயிரம் பேருக்கான காணி உறுதிப் பத்திரங்கள் கையளிக்கப்படவுள்ளன.

வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் திட்டமிடல்கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்த திட்டத்தில் நெடுந்தீவு மக்களுக்கான 76 வீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன இவ்வாறு வட மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

# ஈழத்தமிழ் விவகாரம்:- காணாமல் போகும் ஆபத்து!

உக்ரைன் ரஷ்ய யுத்தத்தின் மீதான கவனம் இஸ்ரேல் ஹமாஸ் யுத்தத்தை தொடர்ந்து புதியதொரு நிலைக்கு சென்றது. உலகின் பிரதான கவனம் மத்திய கிழக்கை நோக்கி நகர்ந்தது. தற்போது நிலைமைகள் மேலும் சிக்கலடைந்திருக்கின்றன. மத்திய கிழக்கின் யுத்த மேகம் உலக அரசியல் நிகழ்ச்சி நிரலையே மாற்றப் போகின்றது. ஈரானின் தாக்குதலை தொடர்ந்து நிலைமைகள் வேகமாக மாறி வருகின்றன. இஸ்ரேல் பதில் தாக்குதலை மேற் கொண்டிருக்கின்றது. இந்த யுத்தமானது மத்திய கிழக்கு இதுவரை காணாத யுத்தமாகவும் மாறலாமென்று சர்வதேச அரசியல் அவதானிகள் எச்சரிக்கின்றனர். இவ் வாறானதொரு நிலையில் ஈழத் தமிழர்கள் மீதான சர்வதேச கரிசனை என்று ஒன்றிருக்கப் போவதில்லை.

கடந்த பதினான்கு ஆண்டுகால அரசியல் நகர்வுகள் படுதோல்வியிலேயே முடிந்திருக்கின்றது. சர்வதேச அழுத்தங்கள் தொடர்பான கதைகள் அனைத்தும் புஷ்வாணமாகி விட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில் வெளியாருக்காகக் காத்திருக்கும் அரசியல் தொடர்பில் நம்பிக்கைகளை எவரேனும் விதைக்க முற்பட்டால் சந்தேகமில்லை அவர்கள் மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களது நோக்கும் தமிழ் மக்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதல்ல மாறாக தங்களின் கதிரைகளை பாதுகாத்துக் கொள்வது மட்டும் தான்.

இஸ்ரேல் ஹமாஸ் யுத்தத்தின் போதான மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுகளுக்கு இஸ்ரேல் எவ்வாறு பதிலளித்திருந்தது அதேவேளை, இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா எவ்வாறு பதிலளித்திருந்தது என்பதெல்லாம் நமக்கு எதை கற்றுத் தருகின்றது? எதையாவது நாம் கற்றுக் கொள்ள முயற்சிக்கின்றோமா? நமது அரசியல் சூழலை அவதானித்தால் எதையும் கற்றுக் கொள்வதற்கான முதிர்ச்சியை காணமுடியவில்லை. தொடர்ந்தும் கதிரைகளை பாதுகாப்பதற்கு ஏற்றவாறு அரசியல் கருத்துகளை முன் வைப்பதையே காண முடிகின்றது.

அண்மையில், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருந்த கருத்துகள் இதற்கு சிறந்த சான்றாகும். தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் தென்னிலங்கையில் இனவாதம் மீண்டும் எழுமாம் அவ்வாறாயின் இப்போது இனவாதம் இல்லையா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் மைத்திரி அரசாங்கத்துடன் தேனிலவில் இருந்த காலத்தில் ஆகக் குறைந்தது, கல்முனை பிரதேச செயலக பிரச்னையைக் கூடத் தீர்க்க முடியவில்லை. இந்த நிலையில் இது மாற்றத்துக்கான தேர்தல் எனவே, தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கே வாக்களியுங்கள் என்று எந்த அடிப்படையில் இவர்களால் கூற முடிகின்றது? மக்கள் ஒரு போதுமே சிந்திக்கவே மாட்டார்கள் என்றா இவர்கள் யோசிக்கின்றனர்?

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை காணமால் போய் விடும் ஆபத்திலிருந்து அதனை காப்பாற்ற வேண்டுமாயின், தமிழ் மக்கள் ஜனநாயக வழிமுறையின் மூலமாக தங்களின் கோரிக்கையை மீண்டும் உரத்துக் கூற வேண்டியிருக்கின்றது. அவ்வாறு கூற வேண்டுமாயின், இந்த ஜனாதிபதித் தேர்தலை விடவும் வேறு என்ன சிறந்த வழியுண்டு? தமிழ் பொது வேட்பாளர் எண்ணக் கருவை எதிர்ப்பவர்கள் இதுவரையில் தர்க்கரீதியில் மாற்று யோசனையை முன் வைக்கவில்லை. பிரச்சனை அவர்களால் முடியவில்லை என்பது தான்.

எதிர்பாருங்கள்! காத்திருங்கள்!
முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகை நடாத்தும் 13வது ஆண்டு
இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# அதிரடிப்படை பாதுகாப்புடன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் தோன்றி சாட்சியம் அளித்த நீதிபதி இளஞ்செழியன்



மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் மீது மேற் கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டு சம்ப வம் தொடர்பிலான வழக்கு விசார ணையில் 24 ஏப்ரல் 2024 புதன்கிழமை நீதிபதி இளஞ்செழியன் நீதிமன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்தார்.

கடந்த 2017ஆம் ஆண்டு ஜீலை மாதம் 22ஆம் திகதி யாழ்ப்பாண மேல் நீதிமன்ற வழக்கு விசாரணைகளை முடித்துக்கொண்டு நல்லூர் பகுதியில் உள்ள தனது உத்தியோகபூர்வ வாசஸ் தலத்திற்கு காரில் பயணித்துக் கொண் டிருந்த வேளை நல்லூர் ஆலய தெற்கு வாசல் கோபுரத்திற்கு அருகில் இருவர் வீதியில் மோதிக் கொண்டு போக்கு வரத்திற்கு இடையூறாக செயற் பட்டனர்.

அதனை அடுத்து நீதிபதியின் மெய்ப் பாதுகாவலரான பொலிஸ் சார்ஜெண்ட் அவர்களை அப்புறப்படுத்த முயன்ற போது மோதலில் ஈடுபட்டிருந்த நபர் களில் ஒருவர் பொலிஸ் உத்தியோ கஸ்தரின் உத்தியோகபூர்வ துப்பாக் கியை பறித்து பொலிஸ் உத்தியோக ஸ்தரை சுட்டதுடன் நீதிபதியின் காரினையும் நோக்கி சுட்டிருந்தார்.

துப்பாக்கி சூட்டில் பொலிஸ் உத்தி யோகஸ்தர் உயிரிழந்ததுடன் மற் றைய பொலிஸ் உத்தியோகஸ்தர் படு காயமடைந்திருந்தார். நீதிபதி தெய்வா தீனமாக காயங்கள் இன்றி உயிர் தப்பி இருந்தார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் சந்தேகநபர் களை கைது செய்தனர்.

சம்பவம் தொடர்பிலான சுருக்கமுறை யற்ற வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெற்று சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு வழக்கு பரப்படுத்தப்பட்டதை அடுத்து சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ்.மேல் நீதிமன்றில் குற்றப்பகிர்வு பாத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் யாழ்.மேல் நீதி மன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணை நடைபெற்ற நிலையில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தனது சாட்சியத்தை மன்றில் தோன்றி பதிவு செய்துள்ளார். அதனை தொடர்ந்து சம்பவத்தில் படுகாயமடைந்த பொலிஸ் (18ம் பக்கம் பார்க்க)

## 2 வருடங்களில் 1800 வைத்தியர்களும் கடந்த வாரம் 7 விசேட வைத்தியர்களும் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர்

கடந்த 2 வருடங்களுக்குள் 1,800 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் அந்த சங்கத்தின் பேச்சா ளர் சமில் விஜேசிங்க தெரிவித்து ள்ளார். குறித்த காலப்பகுதியில் சுமார் 300இற்கும் மேற்பட்ட விசேட வைத் தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி யுள்ளனர். இதனைக் கட்டுப்படுத்து வதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேவை யாற்றி வந்த மூன்றாவது மயக்கவியல் வைத்திய நிபுணர்களும் அதிகாரிகளு க்கு அறிவிக்காமல் வெளிநாட்டுக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளர் இந்த விடயத்தைக் குறிப் பிட்டுள்ளார்.

முன்னதாக ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேவையாற்றிய இரண்டு மயக்கவியல் வைத்திய நிபுணர்கள் முன்னறிவிப்பின்றி வெளி நாட்டுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு விடுமுறை நாட்களில் மாத்திரம் 7 விசேட வைத்தியர்கள் அவர்கள் கடமையாற்றும் வைத்திய சாலைகளுக்குத் தகவல் தெரிவிக்கா மல் நாட்டை விட்டு வெளியேறி யுள்ள தாகச் சுகாதார அமைச்சு தெரிவித்து ள்ளது.

அம்பலாந்தோட்டை பிபில மெதிரி கிரிய எம்பிலிப்பிட்டிய நுவரெலியா ,மஹியங்கனை மற்றும் மொனராகலை உள்ளிட்ட பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் விசேட வைத்தியர்களே இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதன் காரணமாக வைத்தியசாலை களுக்கு வருகை தரும் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை கள் பிற்போடப்படுவதால் நோயாளி களின் உயிருக்கும் பாதிப்பு ஏற்படு மென சுகாதார அமைச்சு தெரிவித்து ள்ளது.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424

# உயிர்த்த ஞாயிறு படுகொலைகளிற்கு யார் காரணம் கண்டு பிடிப்பதற்கு முழுமையான விசாரணைகள் அவசியம் -ஐ.நா.



கொழும்பில் இடம்பெற்ற நினைவு கூரல் நிகழ்வில் இலங்கைக்கான ஐக்கியநாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ரே பிரான்சே 2019 உயிர்த்த ஞாயிறு படுகொலைகளிற்கு யார் காரணம் என்பதை கண்டுபிடிப்பதற்கு முழுமையான வெளிப்படையான விசாரணைகள் அவசியம் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை தொடர்ச்சியாக பொறுப்புக்கூறல் பற்றாக்குறையால் பாதிக்கப்படுகின்றது அது பொறுப்புக்கூறலிற்கான பொறுப்புக் கூறலாகயிருக்கலாம் அல்லது சமீபத்தைய மனித உரிமை மீறல்களிற்கான பொறுப்புக் கூறலாகயிருக்கலாம் என ஐநாவின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

நாடு முன்னோக்கி நகரவேண்டுமென்றால் அதற்கு தீர்வை காண வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் உயர்நீதிமன்ற தாக்குதலை தடுக்க தவறினார்கள் என முன்னாள் ஜனாதிபதி மற்றும் உயர் அதிகாரிகளிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ள போதிலும் பாதிக்கப்பட்டவர்கள் நீதிக்காக இன்னமும் காத்திருக்கின்றனர் என தெரிவித்துள்ள மார்க் அன்ரே பிரான்சே சவால்களிற்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதி வழங்கப்படுதல் காணப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# 15வது ஆண்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்:- புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் மயப்படுத்துமாறு கோரிக்கை



எதிர்வரும் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தல் 15 ஆவது ஆண்டாக அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் மயப்படுத்த வேண்டுமெனச் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் புனித தெரேசா தேவாலய முன்றலில் கடந்த 21 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை சிவில் சமூக அமைப்புக்களின் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் உள்ளிட்ட சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் முள்ளி வாய்க்கால் பேரவலத்தின் 15 ஆவது ஆண்டு நினைவேந்தலைப் பல்வேறு புதிய வழிமுறைகள் ஊடாக மக்கள் மயப்படுத்தி மேற்கொள்வதற்கான முன்மொழிவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதன் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நினைவேந்தல் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்து கொண்ட மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர். கலந்துரையாடலைத் தொடர்ந்து இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் பேரவலம் 15 ஆவது ஆண்டாக நினைவு கூரப்படவிருக்கின்றது. இந்த நினைவேந்தல் மிகவும் முக்கியமானது. இந்த நினைவேந்தலை நாங்கள் பரவலாக்கம் செய்ய வேண்டும். இந்த நினைவேந்தல் மூலம் மீள நிகழாமை உறுதி செய்யப்பட வேண்டும்.

காஸாவில் தற்போது இன்னுமொரு மனிதப் பேரவலம் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட அவலம் மீண்டும் நடைபெறாமலிருப்பதை மனதிலே கொண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நாங்கள் முக்கியத்துவப்படுத்த வேண்டும்.

இந்த நினைவேந்தல் நிகழ்வை ஒரு இடத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்தி வைக்காமல் பரந்த அளவில் எல்லோரும் இயல்பாக நினைவேந்தலை அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கின்றோம்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒரு நீடித்த நினைவேந்தலாக, ஒரு இன அழிப்பின் நினைவேந்தலாக எவ்வாறு மேற்கொள்ளலாம்? என்பதைக் கிராம மட்டப் பொது அமைப்புக்கள் தீர்மானித்து முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

# 5வருட காலப் பகுதியில் 25000 பேர் இராணுவ சேவைக்கு சமூகமளிக்கவில்லை தென்னிலங்கை சமூக விரோத செயற்பாடுகளில் தொடர்பு பட்டுள்ளார்கள்

கடந்த ஐந்து வருட காலப் பகுதியில் சுமார் 25.000 பேர் இராணுவ சேவைக்கு சமூகமளிக்கவில்லை எனவும் விடுமுறை பெறாத நிலையிலேயே அவர்கள் சென்றுள்ளதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த காலங்களில் மேல் மற்றும் தென் மாகாணங்களில் மக்களைக் கொலை செய்வதற்காக, துப்பாக்கி ஏந்தியவர்களாகவும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளாகவும் பயன்படுத்தப்பட்டவர்களில் பெரும்பான்மையானவர்கள் எதுவித அறிவித்தலுமின்றி சேவைக்கு திரும்பாத இராணுவத்தினர் என்றும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இராணுவத்தினர் மற்றும் ஏனைய படையினர் பாதாள உலக குற்றச் செயல்களில் ஈடுபடுவது மற்றும் அவர்கள் பிரசன்னம் தொடர்பாக இராணுவ பொலிஸார் தற்போது விழிப்புணர்வு விரிவுரைகளை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்பாருங்கள்! காத்திருங்கள்!
முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின்
குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள்
அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
13வது ஆண்டு
இன்னிசை மாலையும்
இராப்போசன விருந்தும்
28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை
தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

# தமிழரசுக்கட்சியின் தலைமை

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்ந்தும் நெருக்கடியிலேயே இருக்கின்றது. இந்த நெருக்கடி நிலைமையானது கட்சியின் மக்கள் செல்வாக்கை சிதைவடையச் செய்யும் அதேவேளை கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களையும் உற்சாக மிழக்கச் செய்யக்கூடியது.

ஏனெனில் ஒரு தலைமைத்துத்தின் கீழ் கட்சியை ஒன்றுபடுத்துவதில் தொடர்ந்தும் இழுபறிநிலையே காணப்படுகின்றது. கட்சியின் உண்மையான தலைவர் சிவஞானம் சிறீதரன் தான் அவரையே கட்சியின் பெரும்பான்மை புதிய தலைவராகத் தெரிவு செய்திருந்தது.

ஜனநாயக நெறிமுறைக்கு இணங்கி செல்வதானால் அதனை ஏற்றுக்கொண்டு பயணிப்பதே சரியானது. கட்சியின் யாப்புக்கு அமைவாக விடயங்கள் நடைபெறவில்லை என்பதெல்லாம் கட்சியின் உள்பிரச்னை.

அதனை உள்ளுக்குள் தீர்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் விடயங்கள் இந்த அடிப்படையில் கையாளப்படவில்லை. கட்சிக்குள் இவ்வாறான நெருக்கடி ஏற்பட்டபோது 'ஈழநாடு' ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தது.

அதாவது கட்சிக்குள் இரு அணிகள் உருவாகி விட்டன.எனவே எதிர்கால தீர்மானங்களில் இரு அணிகளின் செல்வாக்கு இறுதித் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாதவாறு சிக்கல்களை ஏற்படுத்தும். அதனை இப்போது காணமுடிகின்றது.

தமிழ்த் தேசிய அடிப்படையில் சிந்திக்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் பலரும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர். ஆனால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டிலிருந்து விலகி செல்வதான குற்றச்சாட்டுக்கு ஆளானவர்களே தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கின்றனர்.

இவ்வாறான நெருக்கடிக்கு கட்சி ஒருபோதும் ஆட்பட்டு விடக் கூடாது என்னும் அடிப்படையில் தான் கட்சியின் ஸ்தாபகர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைவர் தெரிவில் போட்டியை உட்புக ஒரு போதுமே அனுமதிக்கவில்லை. அவர் ஜனநாயகம் தெரியாததால் அதனை செய்யவில்லை என்பதல்ல.

மாறாக ஜனநாயகம் என்பது கட்சியின் அடிப்படையை சிதைக்கும் காரணியாக இருந்து விடக்கூடாதென்பதில் அவர் உறுதியாக இருந்திருக்கின்றார்.

ஆனால் தந்தை செல்வநாயகத்துக்குத் தெரியாத ஜனநாயகம் தங்களுக்குத் தெரியுமென்று சிலர் எண்ணிக் கொண்டதன் விளைவே இன்று தமிழ் அரசுக் கட்சியின் உள் பிரச்சனை தெருவெங்கும் பரிகசிக்கப்படுகின்றது.

தமிழ் அரசுக் கட்சிக்கான தலைவர் தெரிவில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சிறீதரன் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றார்.

ஆனால் தலைவர் தெரிவில் தோல்வியடைந்த சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை எதிர்க்கின்றார். இதன் ஊடாக மீண்டும் ஒரு பலப்பரீட்சை கட்சிக்குள் எட்டிப்பார்க்கின்றது அல்லது அவ்வாறானதொரு பலப்பரீட்சை திட்டமிட்டு ஏற்படுத்தப்படுகின்றது.

இதனை எதிர்கொள்ளும் ஆற்றலுடன் மாவை சேனாதிராசா இருக்கின்றாரா? ஆகக் குறைந்தது மாவை சேனாதிராசா தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுடன் பயணிப்பது தொடர்பில் சில முக்கிய தீர்மானங்களுக்கு வரவேண்டியது காலத்தின் கட்டாயம். தந்தை செல்வநாயகம் தலைமையிலான இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாரம்பரியம் முற்றிலும் மாறுபட்டது.

செல்வநாயகம் பதவி நிலையிலிருந்து கட்சியின் எதிர்காலத்தை மதிப்பிட்ட ஒரு மனிதரல்ல. மாறாக புதிய சூழ்நிலைக்கு ஏற்றவாறு அரசியலை முன்னெடுக்க வேண்டுமென்று எண்ணியபோது சிறிதும் தடுமாற்றமின்றி தனது கொள்கையுடன் முரண்பட்டு நின்ற ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் வீடு தேடிச் சென்றவர். அவ்வாறான ஒருவரின் மரபில் வந்த கட்சியை சேர்ந்தவர்கள் பதவி நிலையை முன் வைத்துத் தங்களுக்குள் மோதிக் கொள்வது நிச்சயம் கட்சியின் தரத்தை பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. தந்தை செல்வநாயகம் போன்று சிந்திக்கக்கூடிய ஒருவராக மாவை சேனாதிராசா மாறுவாரானால் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

# தையிட்டி விகாரைக்கு காணிகளை உரித்தாக்கு! தேசிய பாதுகாப்புக் குழு பிரதேச செயலாளருக்குக் கடிதம்!

வலிகாமம் வடக்கு தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ள தனியார் காணியை விகாரைக்கு உரித்தாக்குவதை உறுதி செய்வதோடு அதற்குப் பதிலாக அப்பகுதி தமிழ் மக்களுக்கு வேறு இடத்தில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு குறிப்பிட்டு ஒருமாத கால அவகாசத்துடன் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளருக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத்வீரசேகரவை தலைமையாகக் கொண்ட மேற்படி குழுவின் செயலாளர் சூலா ஹேரத் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலிகாமம் வடக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க திஸ்ஸ ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிப் பிரச்சினை தொடர்பில் 05-03-2024அன்று சரத் வீரசேகர தலைமையிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் பாராளுமன்ற குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



இந்த காணிப் பிரச்சினையானது இன முரண்பாடுகளை மையப்படுத்தி வேரூன்றி இருப்பதாலும், அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாலும் ஆழமாக ஆராயப்பட்டது.

அதனடிப்படையில் திஸ்ஸ ரஜமகா விகாரை அமைந்துள்ள காணிகள் உள்ளிட்ட அப்பகுதியில் உள்ள காணிகளின் பதிவுகள் அனைத்தும் 2017ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டள்ளதோடு விகாரை அமைந்துள்ள காணியானது ஐந்து பகுதிகளாக பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமையானது பாராளுமன்ற மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரையின் மூலம் தெரிய வந்துள்ளது.

அக்குழுவின் இராணுவ அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம், 8.98 ஏக்கர் பகுதியானது விகாரை கொண்டிருப்பது பட்டயநில அளவையாளர்களால் அளவீடு செய்து உறுதி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் 1956ஆம் ஆண்டு வரைபடத்துக்கு அமைவாகவும், 1971ஆம் ஆண்டு நகரத்திட்டமிடல் வரைபடத்துக்கு அமைவாகவும் குறித்த விகாரை அமைந்துள்ள பகுதியில் உண்மையில் மேலதிகமான நிலங்கள் உள்ளதா என்பதை கருத்தில் கொள்வது பொருத்தமானது.

அதனடிப்படையில், விகாரையைச் சுற்றியுள்ள காணிகளையும், விகாரை அமைந்துள்ள எல்லைக்குள் உள்ள காணிகளையும் அளவீடு செய்து விகாரை உள்ள பகுதியில் தனியார் காணிகள் காணப்படுமாயின் அதற்குப் பதிலாக அருகாமையில் உள்ள வேறு பொருத்தமானி காணிகளை அவர்களுக்கு வழங்குவதற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், திஸ்ஸ ரஜமகா விகாரைக்குச் சொந்தமான காணிணை முன்னுரிமை அடிப்படையில் விகாரைக்கு வழங்குவதோடு அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக அடுத்த ஒருமாத காலத்துக்குள் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகின்றது என்றுள்ளது.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்:- உண்மைகளைக் கண்டறிவதற்கு மீண்டும் விசாரணை அவசியம்- பேராயர்

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்வதவற்கும் காட்டிக் கொடுப்பதற்கும், தயங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய விசாரணைகளை மேற்கொள்வதற்கு தடையாக இருந்ததாக பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் ஆன்மக்கள் இளைப்பாற்றுக்கான பிரார்த்தனை மற்றும் ஐந்தாவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலத்தில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் இடம் பெற்ற போது, கருத்து தெரிவித்த அவர்,

இந்த மோசமான தாக்குதல் காரணமாக இலங்கையின் அரசியல் பயணத்தில் மாற்றங்களை கொண்டு வருவதற்கும், பொருளாதாரத்தில் முன்னேற்றமடையவதற்கும் இன்று வரை முடியாதுள்ளது. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலினால் வீழ்ந்த எமது நாட்டின் பொருளாதாரம் இன்று வரை தலைதூரக்க முடியாதுள்ளமையை, அந்த தாக்குதலின் தாக்கம் எடுத்துக் காட்டுகிறது.

இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு, விஜித் மலல்கொட தலைமையிலான ஒரு குழுவும், பாராளுமன்ற தெரிவுக்குழு மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழு என்பன அப்போது நியமிக்கப்பட்டது. எனினும் குறித்த குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் உண்மைகளை வெளிக் கொணரப்படவில்லை.

2019 நொவம்பர் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் வெற்றி பெற்று ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷவினால் இது குறித்து ஆரம்பக்கட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பாரக்கப்பட்டது.

எனினும் தன்னை ஜனாதிபதியாக்கிக் கொள்ள அவர் இந்த சம்பவத்தை பயன்படுத்தினார். தேர்தலுக்கு பின், நீர்கொழும்பு மற்றும் ஜா-எலை நடத்தப்பட்ட இரு அரசியல் கூட்டங்களிலும் மற்றும் இலங்கை கத்தோலிக்க திருச்சபையினரையும் சந்தித்து கலந்துரையாடிய, கோட்டாபய, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்து கடுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையான சூத்திரதாரிகள் வெளிக்கொணரப்பட்டு, தீர்வை பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

பின்னர் ஜனாதிபதி பதவியேற்ற அடுத்த நாளே என்னை தொலைபேசி ஊடாக அழைத்து உயித்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் குறித்தான விசாரணைகளை முன்னெப்பதனால் தனக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக கூறினார். மேலும், தாக்குதலுடன் தொடர்புடைய அவரின் சிநேகிதர்களை கைது செய்வதவற்கும், காட்டி கொடுப்பதற்கும், தயங்கிய கோட்டாபய விசாரணைகளை மேற்கொள்வதற்கு தடையாக இருந்தமையும் எனக்கு நினைவில் உள்ளது.

தாக்குதல் குறித்து முன்னெடுக்கப்பட்ட முதல் விசாரணைகளின் ஒரு பிரதியை வழங்கிய கோட்டாபய ராஜபக்ஷ மற்ற பிரதிகளை வழங்க மறுத்தமை நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் இது குறித்து அக்கறையின்மையுடன் செயற்பட்டமையும், முறையான விசாரணைகளை முன்னெடுக்க தவறியமையையும், அவரது அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் 6 பேர் கொண்ட குழுவினரை விசாரணை நடத்த நியமித்தமை போன்றவை அவர் தேர்தலுக்கு முன் எமக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற தவறியமை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், இத் தாக்குதல் குறித்து தொடர்ச்சியான விசாரணைகளை முன்னெடுத்து வந்த அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்கியமை, அக் குழுவின் தலைவரை சிறையில் அடைத்தமை மற்றும் மற்றொரு அதிகாரியை இட மாற்றம் செய்தமை, தனக்கு சிநேகப்பூர்வமான நபர்களை விசாரணைகளுக்காக நியமித்தமையும்



என்பன, விசாரணைகளை சுக்கு நூறாக்கினர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து கோட்டாயவின் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மந்தமான விசாரணைகள் எம் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இதனிடையே சுதந்திரமானதும், சுயாதீனமானதும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, அருட்தந்தையர்கள் மற்றும் மதபோதகர்கள் 34 பேரின் கையெழுத்துடன் 2021 ஜுலை 12 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்துக்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை.

அந்த கடிதம் தனக்கு கிடைத்தது என்றவொரு பதில் கடிதம் கூட வரவில்லை. மேலும், 2023 ஒக்டோம்பர் 23 ஆம் திகதி புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இது குறித்தான இரண்டாவது கடிதத்தை அனுப்பி வைத்தோம். அவரிமிருந்தும் எமக்கு எந்தவொரு பதில் கடிதமும் கிடைக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து, நீதியான நியாமான விசாரணைகளை நடத்தப்பட வேண்டும் என நாம் எவ்வளவு வலியுத்தியும், இந்த அரசாங்கம் அதனை சிறிதளவேனும் கண்டு கொள்ளாமல் இருப்பது, இதற்கான தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது எமக்கு தெளிவாக தெரிகிறது. இந்த விடயத்தினை மூடி மறைக்க முயற்சிக்கும், இருந்த அரசாங்கமும் இருக்கின்ற அரசாங்கமும் தொட ர்ச்சியாக ஆட்சி செய்தால், தாக்குதல் சம்பவத்துடன் தொடர்படைய சந்தேக நபர்களும், நிறுவனங்களும் பாதுகாக்கப்படுவார்கள் என்பது எமக்கு இருக்கிற மிகப் பெரிய சந்தேமாகும். இவர்களுக்கும் தாக்குதல் சம்பவத்துக்கு தொடர்பு இல்லை எனில், சத்தியத்தை வெளிப்படுத்த இவர்கள் தயங்க மாட்டார்கள்.

உயித்த ஞாயிறு தாக்குதலை முஸ்லிம் தீவரவாதிகள் நடத்தியுள்ளமை உண்மை. ஆனால், அவர்களுக்கு பின்னால் பலமான சக்தியொன்று இருப்பதற்கான சாட்சி இருக்கும் பட்சத்தில், அது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படாது, சாட்சிகளை புதைக்க தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது.

இவ்வாறான ஒரு தாக்குதல் நடக்கப் போகிறது என்பதை அறிந்தும் அதனை தடுப்பதற்கு எவ்வித முயற்சிகளையும் எடுக்காது இருந்த அரசியல் தலைவர்களுக்கு எதிராக நீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றார்.

# தூண்டில் போடும் விக்கியரும் தூர ஓடும் தலைவர்களும்

கட்டுரையாளர்
- க.அருந்தவபாலன் -

பதவிக் கதிரைக்கு நாட்டமில்லாமல் இருக்கும் ஒருவன் கூட ஒருமுறை அக்கதிரையில் அமர்ந்து விட்டால் அதை விட்டு எழுவதற்கு மனமில்லாதவனாக மாறி விடுகிறான். அதனால் எத்தகைய திருகுதாளங்கள் செய்தேனும் அக்கதிரையைத் தக்க வைப்பதற்கு அவன் முயல்வதை அன்றாடம் நாம் காணமுடியும்.

இது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ நிச்சயமாக தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரவனுக்குக் கனகச்சிதமாகப் பொருந்தும். வடக்கு மாகாணசபைக்கு முதலமைச்சராக அரியணை ஏற்றப்பட்ட காலம் தொடக்கம் இன்று வரை அவரது அரசியல் செயல்பாடுகளை நோக்கும் சாதாரண குடிமகன் ஒருவன் கூட இதனை மறுக்க மாட்டான்.

கட்சியுடன் முரண்பட்ட போதும் முதலமைச்சர் பதவியைக் கடைசி வரை கைவிடாதிருந்தமை, இடைப்பட்ட காலத்தில் தமிழ்மக்கள் பேரவையின் தலைமைப் பதவி, நாடாளுமன்றப் பதவிக்காகப் பேரவையைப் பயன்படுத்தி கட்சி உருவாக்கம் தனது வெற்றியை உறுதிப்படுத்தக் கட்சிகளின் கூட்டு, என்ற உத்திகளைக் கையாண்டு இதுவரை பதவிகளில் சுகம் கண்ட நீதியரசரின் தற்போதயை பதவிக் காலம் கடைசிக் கந்தாயமாகி விட்டதால் அடுத்த பதவிக்காகப் பகீரதப் பிரயத்தனங்களில் இறங்கி விட்டார் என்பதை அவரது அண்மைக் கால நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

அத்தகைய வெளிப்பாடுகளில் ஒன்றுதான் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பான அவரது அண்மைக் காலக் கருத்துகளும் நடவடிக்கைகளும். தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கருவை தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை அடைவதற்காக எவ்வாறு கையாள்வது என ஏனைய சமூக, அரசியல் தலைவர்கள் சிந்தித்து செயற்பட்டுக் கொண்டிருக்கையில் அதனைத் தனது எதிர்காலப் பதவிக்கான ஒரு துருப்புச் சீட்டாக எவ்வாறு மாற்றுவது என்று நீதியரசர் சிந்தித்து செயற்படுகின்றார் போலத் தெரிகிறது.

அதனால் அவரது நோக்கத்தை நன்கு விளங்கிக் கொண்டவர்கள், ஏலவே அவர் தொடர்பாகக் கசப்பான பட்டறிவைப் பெற்றவர்கள் அவர் போடும் தூண்டிலில் அகப்படாமல் விலகி ஓடுவதில் ஆச்சரியமேதுமில்லை.

நீண்ட இழுபறிகளின்பின் நடந்த தேர்தல் மூலம் கிடைத்த வடக்கு மாகாணசபையை வினைத்திறனாக நடத்த விக்னேஸ்வரனுக்கும் இயலுமை இருக்கவில்லல. அவரைக் கதிரையில் அமர்த்தியவர்களும் அதற்கு இடந்தரவில்லை. அரியணை ஏற்றியவர்களுடன் முரண்பட்டு, வீட்டுக்கு வெளியே வந்து வாக்களியுங்கள் என்று அறைகூவல் விடுத்த போதும், முதலமைச்சர் பதவியைத் தூக்கியெறிய அவருக்கு மனம் வரவில்லை. மாகாணசபையின் இறுதிநாள் வரை அக்கதிரையில் இருந்துவிட்டு பின்னர் தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் பதவியில் ஒட்டிக் கொண்டார்.

காலத்தின் தேவை கருதி சமூகத் தலைவர்களையும் அரசியல் தலைவர்களையும் துறைசார் அறிஞர்களையும் ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட தமிழ்மக்கள் பேரவையையும் சரியான முறையில் நெறிப்படுத்திக் கட்டிவளர்க்கத் தவறியது மட்டுமன்றி அதன் முடிவுக்கும் அவரே காரணமானார். தமிழ் மக்கள் பேரவையைத் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் போவதில்லை என்று சத்தியம் செய்த நீதியரசர் அப் பேரவைக் கூட்டத்திலேயே அவரது அரசியல் கட்சியைப் பிரகடனப்படுத்தினார். நீதிமன்றக் கூண்டில் நிற்கும் ஒருவனிடம் சொல்வதெல்லாம் உண்மை என்ற சத்தியத்தை எதிர்பார்த்த ஒரு நீதிபதியின் சத்தியம் ஒரு பொய்ச்சத்தியமானது. தமிழ் மக்களின் பேரியக்கமாக தமிழ் மக்கள் பேரவையை வளர்ப்பதற்குப் பதிலாகத் தனது அரசியல் கட்சியொன்றுக்கான ஆதரவுத் தளத்தை உருவாக்குவதற்காகவே விக்னேஸ்வரன் அதனைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பியிருந்தார் என்பது கசப்பான உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முரண்பட்டதால் அக்கட்சியில் தனக்கு வாய்ப்புக் கிடைக்காது. தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் பதவி அதிகாரமற்றதும் மக்கள் பணிக்கானதும் ஆகையால் அது தனக்குத் தேவையற்றது. நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு கட்சி அவசியம். அதுவும் முழுமையாகத் தனது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற தேவைகளுக்காக அவரால் உருவாக்கப்பட்டதே தமிழ் மக்கள் கூட்டணி.



பொதுத் தேர்தல் நெருங்கி வந்தமையால் சின்னமொன்று தேவை என்பதற்கு அப்பால் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை உறுதிப்படுத்துவதற்கு கட்சிகளின் கூட்டும் அவருக்கு அவசியப்பட்டதால் வேறு சில கட்சிகளையும் தலைவர்களையும் இணைத்துக் கொண்டார். அவரது நோக்கம் நிறைவேறியது. ஆனால் அந் நோக்கம் நிறைவேற உழைத்தவர்கள் எவரும் இன்று அவருடன் இல்லை. கட்சி வேட்பாளர்கள், கூட்டணித் தலைவர்கள், மக்கள் ஆதரவு பெற்ற கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் எவருமே இன்று அவருடன் இல்லை. உண்மையில் இன்றுள்ள தமிழ் மக்கள் கூட்டணி என்ற கட்சி, தேர்தல் ஆணைக்குழுவின் நியதிகளுக்கும் கட்சியின் யாப்பு விதிகளுக்கும் அமையச் செயற்படாமல் இருப்பதால் கட்சியினதும் செயலாளர் உட்பட அதன் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களதும் சட்டவலு கேள்விக்குட்படுத்தக் கூடியதொன்றாகவே உள்ளது.

முதலமைச்சர் பதவி தொடக்கம் நாடாளுமன்றப் பதவி வரை ஏற்றிவிட்ட ஏணிகளை அவர் உதைத்துத் தள்ளிவிட்டதால் இன்று தனிமைப்படுத்தப்படுகிறார் என்பதை அவர் அண்மையில் கூட்டிய சந்திப்புக்கு எந்தவொரு அரசியல் தலைவரும் சமூகமளிக்கவில்லை என்பது நல்ல சான்று.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தானே அதிகாரமிக்க பதவிகளில் இருக்க விரும்பும் ஒருவன் ஏனையவர்களுடன் இணைந்து செயற்படுத்துவதற்கான வாய்ப்பைப் இழப்பதுடன் அவன் தனிமைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பும் அதிகரிக்கும். இதுவே விக்னேஸ்வரனுக்கும் நிகழ்ந்து வருகிறது. பல கட்சிகள் அல்லது தலைவர்கள் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் உருவாக்க விரும்பிய கூட்டணிக்கு இறுதிவரை ஆதரவு தெரிவித்து பங்குபற்றி விட்டு இறுதியில் தனக்கு அக்கட்சியின் செயலாளர் பதவியைக் கேட்டு அடம்பிடித்து வெளியேறிய விக்னேஸ்வரன் மீது அக்கட்சித்

தலைவர்கள் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்துச் செயற்பட முடியும்? தனது கட்சியின் செயலாளராகத் தானே இருக்க வேண்டும் அதேவேளை கட்சியில் தனக்கு மேலே ஒருவர் தலைவராக இருக்கக் கூடாது என்பதற்காகவே தலைவர் பதவியற்ற கட்சி யாப்பை உருவாக்கிய ஒருவர் அதிகாரம் மிக்க பதவியில்லாது எந்தக் கூட்டமைப்பிலும் இருக்க விரும்புவாரா?

அதுமட்டுமன்றி பொதுவான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்காகக் கூடிப் பேசிக் கொண்டிருக்கும் போதே தன்னிச்சையாக ஒரு முடிவைத் தெரிவிப்பது, முன்னுக்குப் பின், முரணாக ஊடகங்களுக்குக் கருத்துரைப்பது, பொது முடிவைப் பின்பற்றாது எதிராகச் செயற்படுவது போன்றவை எல்லாம் விக்னேஸ்வரனின் இயல்பான குணங்களாக இருக்கையில் அவர் தொடர்பாக எச்சரிக்கையுடன் மற்றவர்கள் இருப்பதும் இயல்பானதே.

சென்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக யாழ்.பல்கலைக் கழக மாணவர்களின் அழைப்பின் பேரில் அவரது கட்சி உட்பட தமிழ்க் கட்சிகளின் பல சுற்றுக் கலந்துரையாடல் நடந்து தீர்மானம் எடுப்பதற்கு முதல் நாளே அவர் தனது முடிவை பகிரங்கமாக ஊடகங்களுக்குத் தெரிவித்து விட்டார். இதனால் அவரது கட்சிப் பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி கூட்டணித் தலைவர்களுக்கும் கலந்துரையாடல் கூட்டத்தில் தலைகுனிவை ஏற்படுத்தியிருந்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்புத் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் முடிவுக்கு மாறாக ரணிலுக்கு வாக்களித்தார். இதுபோல பல வாக்கெடுப்புகளில் தமிழ் உறுப்பினர்களின் முடிவுக்கு மாறாக மட்டுமன்றி தமிழ் மக்களின் விருப்பங்களுக்கும் மாறாகவே நடந்து கொண்டுள்ளார்.

தனது தீர்மானமும் தமிழ்த்தரப்பின் தீர்மானமும் ஒன்றானால் கூட்டு, ஒற்றுமை அவசியமென்று முழங்குவார். தீர்மானம் மாறியிருப்பின் இரகசியமாகத் தன்னிச்சையாகச் செயற்படுவார். அரசியல் தீர்மானங்களையும் நீதிமன்றத்தில் நீதிபதி ஒருவரின் தீர்ப்பாகவே விக்னேஸ்வரன் கருதுகிறார் போலும்.

அதாவது சரி பிழை என்பதற்கு அப்பால் தனது முடிவே இறுதியும் அறுதியுமான முடிவாக மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கருதுவது அவர் இயல்பு. அரசியல் முன்மொழிவு ஒன்று தொடர்பாக நேர், மறைக் கருத்துக்களும் விமர்சனங்களும் எழுவது இயல்பு மட்டுமல்ல ஆரோக்கியமான தீரமானத்துக்கு அது அவசியமானதுங்கூட. இது தமிழ்ப் பொது வேட்பாளர் முன்மொழிவுக்கும் பொருந்தும். இது பொருத்தமற்ற தீர்மானமென அண்மையில் சம்பந்தன் அவர்கள் தெரிவித்ததான செய்தியொன்று வெளிவந்தது எல்லோரும் அறிவர். அது பொருத்தமானதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க சம்பந்தன் கூறியதான கருத்துக்கு எதிராக விக்னேஸ்வரன் சம்பந்தன் அரசினால் வழங்கப்பட்ட மாளிகையில் இன்றுவரை இருந்து வருவதால் சம்பந்தன் ஆட்சியாளர்களுக்குச் சார்பாகவே கருத்துக் கூறுவார் என்ற சாரப்பட ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

தமிழ் மக்களின் அரசியல் தொடர்பாக சம்பந்தன் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருப்பினும் இவ்வாறு சம்பந்தன் மீது பழி சுமத்த தனக்கு அருகதை உள்ளதா என்று விக்னேஸ்வரன் ஒரு கணம் சிந்தித்திருக்க வேண்டும். முதலமைச்சர் பதவி போன பின்னர் கோவில் வீதியில் விக்னேஸ்வரன் வசித்து வரும் வீட்டுக்கான வாடகை உட்பட கட்சியின் செலவுகள், சமூக நலன் செலவுகள், அவரது தேர்தல் செலவுகள் எல்லாமே புலப்பெயர்ந்த சிலரின் கொடையாக உள்ளன. பயன்படுத்தும் வாகனங் கூட அவருக்குச் சொந்தமானது அல்ல.

அவ்வாறாயின் கொடை வழங்கி வரும் புலம் பெயர்ந்த ஒருசிலரின் விருப்பத்தின்படியே விக்னேஸ்வரன் அரசியல் செய்கிறார் என்று அவரைப் பார்த்துச் சம்பந்தன் திருப்பிக் கூறமுடியமல்லவா? ஆனால் வளர்த்த கடா பல முறை சம்பந்தன் மார்பில் பாய்ந்த போதும் அமைதியாக இருந்தது சம்பந்தன் அரசியல் முதிரச்சியைக் காட்டுகிறது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்தவது என்பது சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் இணைந்து முன் கொண்டு செல்ல வேண்டிய ஒன்று. சமூகத்தின் அடிமட்டம்வரை அது பற்றிய விழிப்புணர்வு அவசியமாகும். அதன் பலம், பலவீனம், வாய்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் தொடர்பான ஆழமான பார்வை அவசியம்.

அதேவேளை மாற்றுக் கருத்துடையோரையும் தெளிவுபடுத்தி இணைக்க வேண்டும். சமூகத்தில் அம்முன்மொழிவு பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரே அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்க வேண்டும். அந்நடவடிக்கைகள் கூட சமூகத்தின் பல்வேறு தரப்பு பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

(20ம் பக்கம் பார்க்க)

# 13வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**
**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**
**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**
**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**
**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**
**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**
**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**
**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

13 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 13 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள்.

இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

20 ஏப்ரல் 2024 - 26 ஏப்ரல் 2024 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 13வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி மனோண்மணி பாலசுந்தரம்

கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வதிவிடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய முன்னாள் ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 21 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக் கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 22வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி கங்காதரன்

மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 22வது ஆண்டு நினைவு நாள் 23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தின ருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 10வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி புவனேஸ்வரி இராஜதுரை

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி புவனேஸ்வரி இராஜதுரை அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாள் 06 மே 2024 திங்கட்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி புவனேஸ்வரி இராஜதுரை அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 25வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசம்மா நன்னித்தம்பி

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களின் 25வது ஆண்டு நினைவு நாள் 10 மே 2024 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி இராசம்மா நன்னித்தம்பி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகரெத்தினம் முருகேசு

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் மண்கும்பான் மேற்கை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களின் மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 16 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகரெத்தினம் முருகேசு அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 40வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சூசைப்பிள்ளை இரத்தினம் குமாரசாமி

காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு சூசைப்பிள்ளை இரத்தினம் குமாரசாமி அவர்களின் நாற்பதாவது ஆண்டு நினைவு நாள் 24 ஏப்ரல் 2024 புதன் கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 27 ஏப்ரல் 2024 சனிக்கிழமையா அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சூசைப்பிள்ளை இரத்தினம் குமாரசாமி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



20 ஏப்ரல் 2024 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு விஜயகுமாரன் இளையதம்பி அவர்கள் தனது பிறந்த நன்நாளுக்காக தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



21 ஏப்ரல் 2024 ஞாயிற்றுக்கிழமை கிழக்கிலங்கை கோமாரியைப் பிறப்பிடமாகவும் திருக்கோவிலை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இளைப்பாறிய ஆசிரியை திருமதி மனோன்மணி பாலசுந்தரம் அவர்களது பத்தாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 6ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா குமாரசாமி அவர்களது நினைவாக அன்னாரது குடும்பத்தினர் சித்திரா பௌர்ணமி உபயமாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியவதி நல்லையா அவர்களது நினைவாக கனடாவில் வசிக்கும் திரு நல்லையா குடும்பத்தினர் சித்திரா பௌர்ணமி உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்வராஜா இராஜேஸ்வரி அவர்களது நினைவாக அவரது மகள் யசோதரா பரமேஸ்வரன் அவர்கள் சித்திரா பௌர்ணமி உபயமாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆறுமுகம் செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஆறுமுகம் செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆறுமுகம் செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஆறுமுகம் செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்


23 ஏப்ரல் 2024 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு ஆறுமுகம் செல்வராஜா அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு ஆறுமுகம் செல்வராஜா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



25 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றொபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



25 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றொபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்


25 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு றொபின் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு றொபின் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்




25 ஏப்ரல் 2024 வியாழக்கிழமை இணுவில் யாழ்ப்பாணத்தில் வசிக்கும் திருமதி அமிர்தலிங்கம் இராஜேஸ்வரி அவர்களது 82வது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி அமிர்தலிங்கம் இராஜேஸ்வரி அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்

**28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை**
**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளுக்காக நடாத்தும் 13வது ஆண்டு இராப்போசன விழாவில் கலந்து கொள்ள தமிழ்கூறு நல்லுலகின் தன்னிகற்ற பேச்சாளர் "மொழி அரசி" பர்வின் சுல்தானா அவர்கள் கலந்து கொள்கின்றார். அத்துடன் Zee தமிழ் புகழ் பாடகர் கோபாலகிருஷ்ணனுடன் எங்கள் பிள்ளைகள்**



தொடர்புகளுக்கு
ஈழநாடு பரமேஸ்
416 841 9600






கனடா – அருள்மிகு

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

## அம்பாள் அடியார்களே!

அருள்மிகு கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில் பக்தர்களுக்கு வணக்கம். கனடா ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில் இலாப நோக்கமற்ற தொண்டு நிறுவனமாக கனடா அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இதுவரை காலமும் கோயில் நிலம் வாங்குவதற்கு நன்கொடை கொடுத்த பக்தர்கள் அனைவரும் உங்கள் பழைய பற்றுச்சீட்டை கோயிலில் கொடுத்து கனடிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலக்கம் பதியப் பெற்ற புதிய பற்றுச்சீட்டை கோயிலில் பெற்றுக் கொண்டு அரசாங்கத்திடமிருந்து வருமானவரி வரிச் சலுகையை பெற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இனி வரும் காலங்களில் கனடா ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயிலுக்கு நிலம் வாங்குவதற்கும் இப்போது நடை பெறும் திருப்பணிக்காக நன்கொடை செய்வதற்கும் அல்லது எந்தவிதமான பூஜைகள் திருவிழாக்களிற்கும் கோயிலில் பணம் கொடுக்கும் போது அதற்குரிய பற்றுச்சீட்டை பெற்றுக் கொள்ளுவதன் மூலம் அரசாங்கத் திடமிருந்து வருமானவரி வரிச்சலுகையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓம் தாயே மகமாரி – நிர்வாகசபை

## இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




யாழ் இந்துக் கல்லூரிச் சங்கம் - கனடா
JAFFNA HINDU COLLEGE ASSOCIATION - CANADA
Proudly Presents

ANNUAL GALA DINNER 2024

Save the date

MAY 04TH, 2024 SATURDAY AT 6:00 PM

SCARBOROUGH CONVENTION CENTRE
20 TORHAM PL, SCARBOROUGH, ON M1X 0B3

CONTACTS
DIVAGARAN (416) 888-7877
KUGATHASAN (416) 558-5939
SUTHARSHAN (416) 854-6768
ARAVINTHAN (416) 843-6234



அனலை எக்ஸ்பிரஸ் Analai Express HD TV

உங்கள் கோவில் திருவிழாக்களை நேரடியாக தரிசனம் செய்ய

"ANALAI EXPRESS FOR LIVE COVERAGE OF ALL YOUR TEMPLE FESTIVALS."

FOR CONTACTS
Canada :- (647) 278-5881
Canada :- (416) 678-5866
Sri lanka :- +94 77 2849207
Analaiexpress@gmail.com
Analai.ca

LIVE STREAMING

Analai Express Media Inc
Analai Express HD TV
Analai Express



SATHANGAI NARTHANALAYAM
SOUTH INDIAN DANCE ACADEMY

BIRTHDAY
You're Invited!

Vanakam, loved ones

I am thrilled to cordially invite you to join me in celebrating my 60 th birthday by honoring my loving Ammah's remarkable 90 th birthday.
The event will feature a unique program with performances by my talented students, adding an extra touch of joy and meaning to the occasion.

Date: April 29th 2024
Time: 7:00 pm to 10.00 pm
Location: Chinese Cultural Center Of Greater Toronto
5183 Sheppard Ave E,
Scarborough, ON M1B 5Z5

Your presence and blessing will truly make this evening even more meaningful. I eagerly anticipate sharing this memorable birthday with you.



Warm Regards
Vasu Master

# தேர்தலில் மக்களின் ஈடுபாடு: கருத்தியல் யுத்தமா? வாழ்வாதார பிரச்னைகளா?

ராஜன் குறை

இந்திய அரசியலில் இதுவரை இல் லாத அளவுக்குக் கூர்மையானதொரு கருத்தியல் யுத்தமாக 2024 நாடாளுமன்றத் தேர்தல் அமைந்துள்ளது. இரண்டு அணிகள். என்டிஏ என்ற பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி. இன்டியா என்ற காங்கிரஸ் முக்கிய பங்கேற்கும் இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கக் கூட்டணி.

இரண்டு அணிகளிலுமே பல முக்கிய கட்சிகளும் தேர்தல் அறிக்கைகளை வெளி யிட்டு விட்டன. காங்கிரஸ், பாஜக ஆகிய இரண்டு முக்கிய தேசிய கட்சிகளும் அறிக் கைகளை வெளியிட்டு விட்டன. அவற்றிலி ருந்து நாம் கருத்தியல் வேறுபாட்டை கீழ்கண்டவாறு புரிந்து கொள்ளலாம்.

**என்டிஏ என்பதன் கருத்தியல்:**

பெருமுதலீட்டிய வளர்ச்சி, கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகள், பார்ப்பனீய - இந்துத் துவ தேசிய கலாச்சார ஆதிக் கம், ஒன்றிய அரசை ஒற்றை தேசிய அரசாக மாற்றி அதி காரத்தை ஒரே புள்ளியில் குவிப்பது. அதற்கு ஏற்றாற்போல இவர்கள் தேர்தல் அறிக்கை யில் கூறியுள்ள முக்கியமான கருத்தியல் சார்ந்த முடிவுகள் "ஒரே நாடு, ஒரே தேர்தல்" திட்டத்தை நடைமுறைப்படுத்துவது, பொது சிவில் சட்டத்தை அமல்படுத்துவது போன்றவை.

**"இன்டியா" என்பதன் கருத்தியல்:**

அனைவரையும் உள்ளடக்கிய பொரு ளாதார வளர்ச்சி, மக்கள் நலன் நோக்கு, ஏழ்மை ஒழிப்பு, பன்மைத்துவ கலாசாரம், மதச்சார்பின்மை, மத நல்லிணக்கம், கூட் டாட்சி அதிகாரப் பகிர்வு, மாநில உரிமை களைப் பாதுகாத்தல். அதற்கு ஏற்றாற்போல அவர்கள் அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் சமூக நீதி, பொருளாதார நீதி, கூட்டாட்சி நீதி சார்ந்தவை.

காங்கிரஸின், இந்தியா கூட்டணி கட்சிக ளின் கருத்தியல் பரந்துபட்ட மக்கள் நலன் சார்ந்ததாகவும், முற்போக்கானதாகவும் இருந்தாலும் ஊடகங்கள், குறிப்பாக வட நாட்டு, ஆங்கில மொழி ஊடகங்கள் பாஜக-வே வெற்றி பெறும் என்றும், பிரதமர் மோடியை பெரும்பாலோனார் பிரதமராகத் தொடர விரும்புகின்றனர் என்றும் கருத்துக் கணிப்பு மற்றும் கருத்துத்திணிப்பு களை தொடக்கம் முதலே வெளியிட்டு வருகின்றன.

இந்தக் கணிப்பு - திணிப்புகளில் என்ன பிரச்சினையென்றால் கருத்தியல் சார்ந்த விவாதங்களுக்கு முக்கியத்துவம் அளிப்ப தில்லை என்பதுதான். தேர்தலின் முடிவுகள் குறித்து ஆருடம் சொல்கிறார்களே தவிர, இரண்டு அணிகளில் எதன் கருத்தியல் நோக்கு நாட்டுக்கு நல்லது என்பதை விவாதிப்பதில்லை.

**மக்களுக்கு கருத்தியலில் அக்கறையில்லையாம்!**

தேர்தல்கள் குறித்த விவாதங்கள் பல வற்றில் ஒரு கருத்து பரவலாக முன்வைக் கப்படுகிறது. அது என்னவென்றால் சாமா னிய மக்களுக்கு அவர்கள் வாழ்வாதாரப் பிரச்சினைகள்தான் முக்கியமானவை. வேலையில்லா திண்டாட்டம், விலைவாசி உயர்வு போன்ற பிரச்சினைகள்தான் மக்களின் அன்றாட வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

அதனால் ஏழை எளியவர்களுக்கு இந் துத்துவமா, மத சார்பின்மையா, பார்ப்ப னீயமா, சமூக நீதியா, ஒன்றிய அரசின் மேலாதிக்கமா, கூட்டாட்சி தத்துவமா, ஒற்றை பண்பாட்டு தேசி யமா, மாநில உரிமைகளா என்பதிலெல் லாம் அக்கறை கிடையாது. அவர்களுக்கு வாழ்வாதாரப் பிரச்சினைகள்தான் முக்கியம். குடிநீர், சுகாதாரம், உணவு, உடை, வசிப்பிடம் என்பதெல்லாம் முக்கிய பிரச்சினைகள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது.

மேலும், கருத்துச் சுதந்திரம் இருக்கி றதா, ஊடகங்களின் குரல்கள் நசுக்கப் படுகின்ற னவா, சட்டத்தின் ஆட்சி நடக்கிறதா, நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்கு ஆளும் கட்சி பதில் அளிக்கி றதா, பிரதமர் பத்திரிகையாளர்களை சந்திக்கி





றாரா என்பதெல்லாம் எளிய மக்களின் அக்க றைகளுக்கு அப்பாற்பட்டவை என்றும் அறிவுஜீவிகளால் கூறப்படுகிறது. இதெல்லாம் உண்மை என்றே எடுத்துக் கொள்வோம். ஆமாம், ஏழைகளுக்கு, தினக்கூலி தொழிலாளர்களுக்கு வாழ் வாதாரம்தான் முக்கியப் பிரச்சினை. அவர்களில் பெரும்பாலோருக்கு கருத்தி யல் சிந்தனைகளை படித்தறிய, விவா திக்க வாய்ப்போ, நேரமோ இல்லை என்பது உண்மைதான்.

ஆனால், இங்கேதான் முக்கியமான ஒரு கேள்வி எழுகிறது. சமூகத்தில் அறிவு ஜீவிகள், சிந்தனையாளர்கள், அரசியல் வாதிகள் ஆகியோரது வேலை என்ன? அது வாழ்வாதாரப் பிரச்சினைகளுக்கும், கருத்தியலுக்கும் உள்ள தொடர்பை மக்களி டம் எடுத்துக் கூறுவதுதானே? அந்தப் பணியை அவர்கள் செய்கிறார் களா, இல்லையா என்பதை பொறுத்துத் தானே மக்களாட்சி தழைக்கும்?

மக்களுக்கு வாழ்வாதாரம்தான் பிரச் சினை என்பதால் பார்ப்பனீயச் சொல் வடை சொல்வதுபோல அவர்களுக்கு "ராமன் ஆண்டாலும், ராவணன் ஆண்டாலும்" ஒன்றுதான் என்றால், நாம் எதற்காக தேர்தல்களையும், மக்களாட்சியையும் நம்ப வேண்டும்? எதற்காக கல்விக் கூடங்கள், ஊடக அலசல்கள், அரசியல் கட்சி பிரசாரங் கள்? எதற்காக தொழிற் சங்கங்கள், விவசாயி களின் இயக்கங்கள், மாணவர் அமைப்புகள், மாதர் சங்க அமைப்புகள்?

இதைத்தான் அறிஞர் அண்ணா பணத் தோட்டம் நூலிலே அழகாக எடுத்துக் கூறுகிறார். "வயலோரத்திலே இருப்பவ னுக்கு தான் திராவிடன் என்று தெரியாது. ஏழை என்பது தெரியும். நமக்கோ இரண்டும் தெரியும்.

ஆலையிலே உள்ளவனுக்கு ஆரிய-திரா விட பிரச்சினை அர்த்தமற்ற கூச்ச லாகவே தெரியும். அவனுக்கு தன் அன் றாடக் கஷ் டம்தான் தெரியும். நமக்கோ அந்த இரண்டும் தெரியும்.

அவர்கள் நம்மை மறப்பது ஆச்சர்ய மல்ல. நாம் அவர்களை மறப்பது மன்னிக்க முடியாத குற்றம். நம்மை அவர்கள் அறியார் கள்! நாம் அவர்களை அறிவோம்! அறிவதால் அவர்களுக்குப் பணிபுரிவோம்!"

பணிபுரிவதென்றால் என்ன? அவர் கள் போராட்டங்களில் பங்கேற்பது, அவர்களி டமும் கருத்தியல் சிந்தனையை உருவாக்கு வது. கருத்தியல் தெளிவில்லா மல் வாழ்வா தாரப் பிரச்சினையை தீர்ப்ப தெப்படி என்பதே கேள்வி. இதைப் புரிந்துகொள்ள இரண்டு காணொலி களை விவாதிப்போம்.


**கருத்தியல் தீர்மானிப்பதே வாழ்வாதாரம்!**

நான் பார்த்த ஒரு காணொலியில் நீல கிரி தொகுதியில் போட்டியிடும் தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராஜா அவர்களிடம் காங்கிரஸ் தேர்தல் அறிக்கை யில் வறுமைக்கோட்டுக்குக் கீழேயுள்ள குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் கொடுப்பதைக் குறித்து கேட்கிறார்கள். அவர் அதற்கு எளிமையாக பதில் சொல்கிறார்.

இயற்கை வளங்கள் என்பவை, அதா வது நிலம், நீர், காற்று உள்ளிட்ட அனைத்தும் அனைத்து மனிதர்களுக்கும் பொதுவா னவை. ஆனால், மனித சமூகத் தில் சிலர் அதிக சொத்துகளைக் குவித்துக்கொண்டு, அதிக வருமானத்தை ஈட்டிக்கொண்டு இருக்கும் ஒரு பொருளாதார அமைப்பை உருவாக்கியுள்ளோம். அதனால் அரசு அவர்க ளுக்கு வரி விதித்து, அந்த வரியினை ஏழை மக்க ளுக்கு உதவ பயன்படுத்த வேண்டும் என்று கூறுகிறார். இதுதான் சோஷலிச கருத்தியல். இதை மக்களுக்கு எடுத்துக் கூறுவது கடினமா என்ன?

இன்னொரு காணொலியில் பர்க்கா தத் என்ற ஊடகவியலாளர் CSDS-Lokniti என்ற அமைப்பை சேர்ந்த பேராசிரிய ரிடம் உரையாடுகிறார். அந்த அமைப்பு மக்களி டையே விரிவாக கருத்துக் கணிப்பு நடத்தி வெளியிட்டுள்ளது. அந்தப் பேராசிரியர் எளிய மக்களுக்கு வேலை இல்லாமை, விலை வாசி ஏற்றம் ஆகியவைதான் பிரச்சினை. எதிர்க் கட்சிகள் அதைப் புரிந்துகொண்டு பேசு வதில்லை என்கின்றார்.

இது போன்ற ஆங்கில உரையாடல் களில் இந்த மேட்டுக்குடியினர் மொத்த




பொறுப்பையும் எதிர்க்கட்சிகள் மீது சுமத்துவதும், பழி போடுவதும் வியப் பிற்குரியது. இவர்களுக்குத் தெரியும் பாஜக கார்ப்பரேட்களுக்கு எவ்வளவு வரிச்சலுகை அளிக்கிறது, வாராக்கடன் களை தள்ளுபடி செய்கிறது என்று. அவற்றை தவிர்த்து பெட் ரோல் மீதான வரியை குறைத்தால் விலை வாசி குறை யும் என்று. இதை எதிர்க்கட்சிகள் கூறினால் அவர்கள் மக்களுக்குப் புரியாத கருத்தியலை பேசுவதாகக் கூறுகிறார்கள்.

**சமூக நீதி குறித்து மக்களுக்கு அக்கறையில்லையா?**

தேர்தலுக்கு பல மாதங்கள் முன்பி ருந்தே "இன்டியா" கூட்டணி கட்சிகள் ஒரு முக்கிய மான அம்சத்தை வலியுறுத்தி வருகின்றன. அது என்னவென்றால், ஜாதிவாரி மக்கள் தொகைக் கணக் கெடுப்பு. பாஜக அரசு 2021-ம் எடுக்கப் பட வேண்டிய மக்கள் தொகை கணக்கெடுப்பையே எடுக்க வில்லை. அதை எடுப்பதுடன், அதில் ஜாதிகளையும், பொருளாதார சூழலையும் சேர்க்க வேண்டும் என்று காங்கிரஸ் தேர்தல் அறிக்கை கூறுகிறது.

எதனால் ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு என்றால், எழுபதாண்டு காலமாகியும் நமது குடியரசில் செல்வாக்கு மிக்க பதவிகளில் ஆதிக்க ஜாதியினரே பெருமளவில் உள்ளனர் என்பதுதான். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஜாதியி னர் அரசியல் பிரதிநிதித்துவத்தில் இடம் பெற்றாலும், கல்வி, திறன்கள் பெறுவதிலும், சமூகத்தில் அதிகாரமிக்க தொழில்களில், பதவிகளில் இடம்பெறுவதும் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

உதாரணமாக ஒன்றிய அரசுத் துறை களை நிர்வகிக்கும் செயலர்களில் பிற் படுத் தப்பட்ட வகுப்பினர் மூன்று சத விகிதம் பேரே உள்ளனர் என்பதை ராகுல் காந்தி சுட்டிக் காட்டியுள்ளார். இது எதைக் காட்டுகின்றது என்றால் பழைய வர்ண தர்ம சிந்தனை உரு ாக்கிய படிநிலை அமைப்பு பல்வேறு நுட்பமான வகைகளில் இன்றும் தொடர்கிறது என்பதைத்தான். இதனை எப்படி மாற்றியமைப்பது என்பதை சிந்திக்கத்தான் விரிவான தரவுகளை உள்ளடக்கிய மக்கள் தொகை கணக் கெடுப்பு தேவைப்படுகிறது.

அது மட்டுமல்லாமல் காங்கிரஸ் மற்றும் இன்டியா கூட்டணி கட்சிகள் இட ஒதுக்கீட் டுக்கான அதிக பட்ச வரம்பு 50 வீதம் என்பதை தேவைக்கேற்ப உயர்த்த வேண்டும் என்றும் கூறுகின்றன.

பாஜக இந்த முக்கியமான பிரச்சினை யில் எந்த நிலைப்பாடும் எடுக்கவில்லை. அவர் கள் ஜாதிவாரி கணக்கெடுப்பை செய்ய விரும்பவில்லை என்பது தெளி வானது. அதேபோல இட ஒதுக்கீட்டு வரம்பை உயர்த்துவதிலும் அவர்களுக்கு நாட்டம் கிடையாது. பொருளாதாரத்தில் நலிவுற் றோருக்கான இட ஒதுக்கீட்டை, முன்னேறிய வகுப்பினருக்கு மட்டுமானது என்று வரைய றுத்தது பாஜக அரசு. ஆனால், காங்கிரஸ் அதை அனைத்து வகுப்பினருக்குமானதாக மாற்ற உறுதியளித்துள்ளது.

இந்த சமூக நீதி அம்சங்களைக் குறித்து CSDS-Lokniti கருத்துக்கணிப்பில் எதுவும் கேட்கப்பட்டதாகவே தெரிய வில்லை. இப்போதுள்ள இட ஒதுக் கீட்டு விகிதம் போதுமானதா, மக்கள் என்ன நினைக்கி றார்கள் என்பதையும் கருத்துக்கணிப்பில் கேட்கலாமே. வேலையின்மை குறித்து கேட்கிறார்கள். அதை முன்னேறிய வகுப்பினர், பிற்படுத் தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று பல வகுப்பினரிடமும் கேட்கிறார்கள். அப்படியே அவர்களிடம் இட ஒதுக்கீடு அதிகரிக்கப்பட வேண்டுமா என்றும் கேட்கலாமே? ஜாதிவாரி கணக்கெடுப்பு தேவையா என்றும் கேட்கலாமே?

வழமையாகச் சொல்வதுபோல இந்திய சமூகத்தில் ஈராயிரம் ஆண்டு களாக நிலைபெற்ற கருத்தியல் என்பதே ஜாதீயம்தானே? பார்ப்பனீயம்தானே? அதை எப்படி எதிர்கொள்வது, சீர் செய்வது என்பதுதானே சமூக நீதி கருத்தியல்? இதனைக் குறித்து கருத்துக்கணிப்பு நடத்தாமல், யார் உங்களுக்குப் பிடித்த பிரதமர் வேட்பாளர் என்று கருத்துக்கணிப்பு நடத்துவதால் என்ன பயன்?

**மக்களின் அன்றாட வாழ்வை, வாழ்வாதாரத்தை தீர்மானிக்கும் கருத்தியல்**

ஊடகங்களோ, உயர்தட்டு அறிவு ஜீவிகளோ செய்யாவிட்டாலும் நாம் எந்தெந்த அம்சங்களில் இந்தத் தேர்த லில் கருத்தியல் மோதல் நிகழ்கிறது என்பதை புரிந்துகொள்வோம். அதற்கு உதவும் சிறிய அட்டவணையை தொகுத் துக் கொள்வோம். எல்லா அம்சங்க ளையும் பேச முடியாவிட்டாலும் முக்கியமான புள்ளிக ளாவது தெளிவாக இருக்க வேண்டும்.

இந்த கருத்தியல் வேறுபாடுகள் எல்லாமே மக்களின் அன்றாட வாழ்வை, வாழ்வாதாரத்தை பாதிப்பவைதான். அதை மக்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்வதுதான் படித்தவர்களின், குடி மைச் சமூகத்தின், ஊடகத்தின், அரசியல் கட்சிகளின் கடமை. மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பார்கள். மக்கள் முன் இந்த வேறுபாடுகளை தெளிவாக வைத்த பின், அவர்கள் வழங்கும் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதுதான் சரியான மக்களாட்சி. இவற்றை பேச மறுத்து தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை மட்டுமே பேசுவது பொறுப்புள்ள செயல் அல்ல.

# தமிழ்ப் பொது வேட்பாளர்:- பயங்களும் பதில்களும்

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -







ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த 15 ஆண்டுகளில் அதிகம் பேசு பொருளாக மாறியிருப்பது இந்த முறை தான். அது ஒன்றுக்கு மேற்பட்ட தரப்புக்களால் முன்னெடுக்கப்படுவதும் இந்த முறை தான். அது மட்டுமல்ல அது அதிகம் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாகும் ஆபத்துக்கள் நிறைந்திருப்பதும் இந்த முறை தான்.

இந்தக் கோரிக்கையை கோட்பாட்டு ரீதியாக முதலில் முன் வைத்தவர் மு.திருநாவுக்கரசு. இக் கோரிக்கையை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு விளங்கிக் கொள்ளாமல் பிரயோகித்தவர்கள் குமார் பொன்னம்பலமும் சிவாஜிலிங்கமும் ஆவர்.

மு.திருநாவுக்கரசு 2010 ஆம் ஆண்டு அதாவது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த அடுத்த ஆண்டு பொங்கு தமிழ் என்ற இணையதளத்தில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று கட்டுரை எழுதினார். ஆனால் அந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த் தரப்பு ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பதாக நினைத்துக் கொண்டு அதே ராஜபக்சக்களின் ஆணையை முன்னெடுத்த தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள்.

திருநாவுக்கரசுவின் கட்டுரையை யாரும் பொருட்படுத்தவில்லை. பின்னர் 2015 ஆம் ஆண்டும் திருநாவுக்கரசு அதே கட்டுரையை சிறு மாற்றங்களோடு அதே இணையத் தளத்தில் எழுதினார். அப்பொழுது ஆட்சி மாற்ற அலை வீசியது. ராஜபக்சக்களைத் தோற்கடிப்பதற்காக ரணில் மைத்திரி கூட்டு ஒன்றை மேற்கு நாடுகளும் இந்தியாவும் சேர்ந்து உருவாக்கின. அப்பொழுதும் தமிழ்மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பதாகக் கருதிக் கொண்டு இறுதிக் கட்டப் போரில் தற்காலிகமாக பாதுகாப்பு மந்திரியாக இருந்த மத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள்.

திருநாவுக்கரசு இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் அது தொடர்பாக எழுதிய பின்னரும் தமிழ் அரசியல் சமூகம் அது தொடர்பாகக் கவனத்தில் எடுக்கவில்லை. அதனால் நோர்வையில் வசிப்பவரும் திருநாவுக்கரசுவின் மாணவருமான ஒரு புலமையாளர் அவரிடம் கேட்டார்...

என் நீங்கள் திரும்பத் திரும்ப எழுதுகிறீர்கள்? என்று. அதற்கு திருநாவுக்கரசு சொன்னாராம் ஒரு முறை எழுதியதை யாரும் உள்வாங்கவில்லை என்பதனால் தான் அதைத் திரும்பத் திரும்ப எழுத வேண்டியிருக்கிறது என்று. கடந்த பல தசாப்தங்களாக தமிழ் அரசியலில் சரியான அறிவியல் முடிவுகள் எடுக்கப்பட்டிருகின்றன. ஆனால் அவை அரசியல் தீர்மானகளாக மாற்றப்படவில்லை என்று மேற்படி நோர்வீஜியத் தமிழர் அடிக்கடி கூறுவார்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வந்த பொழுது தமிழ் மக்கள் பேரவை ஒரு சுயாதீனக் குழுவை உருவாக்கியது. அக்குழு ஒரு தமிழ்ப்பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எல்லாக் கட்சிகளையும் சந்தித்தது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்திருந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அது தொடர்பாக தெளிவான பதில்களைக் கூறவில்லை. கோட்டாபய தனது அமெரிக்கப் பிரஜா உரிமையைத் துறப்பதில் இருக்கும் சட்டச் சிக்கல்களை முன் வைத்து சம்பந்தர் உரையாற்றினார். அதுமட்டுமல்ல ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால் அது சிங்கள மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களைத் தூண்ட உதவாதா என்றும் அவர் கேட்டார்.

தமிழரசுக் கட்சி அப்பொழுது தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. கூட்டமைப்புக்குள் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகள் துணிந்து முடிவெடுக்கவில்லை. விக்னேஸ்வரன் அதை ஆதரித்தார். ஐங்கரநேசன் அனந்தி போன்றவர்களும் அதை ஆதரித்தார்கள். எனினும் ஒரு கட்டத்துக்கு மேல் அந்த விடயத்தை செயலுருப்படுத்த தமிழ் மக்கள் பேரவையால் முடியவில்லை. அது உருவாக்கிய சுயாதீனக் குழுவானது அது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டதோடு சரி.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கும் பல மாதங்களுக்கும் முன்னரே இந்த விடயத்தை முதலில் கையில் எடுத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். அதன் பின் மக்கள் மனு என்று அழைக்கப்படும் ஒரு சிவில் சமூகம் அதனை முன்னெடுக்கின்றது.அந்த சிவில் சமூகம் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இரண்டு கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கிறது. அதே சமயம் புலம் பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் இது தொடர்பில் சிந்திப்பதாகத் தகவல்கள் வெளிவந்தன.

விக்னேஸ்வரன் அது தொடர்பாக வெளிப்படையாகவே பேசி வருகிறார். தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அடுத்த படியாக அவர் இப்பொழுது அதிகமாகப் பேசி வருகிறார். அவர் சிவகுரு ஆதீனத்தின் முதல்வரை அவ்வாறு பொது வேட்பாளராக நிறுத்தலாமா என்றும் ஒரு பரிந்துரையைச் செய்திருந்தார்.

அதேசமயம் ஈழத்துச் சிவசேனையின் தலைவராகிய மறவன்புலவு சச்சிதானந்தம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை பொது வேட்பாளராக சிபாரிசு செய்திருந்தார். இவ்வாறாக தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் இப்பொழுது மேற்பரப்புக்கு வந்து விட்டது. அது அதிகம் பேசப்படும் ஒரு விடயமாக மாறி விட்டது. அதில் பல்வேறு தரப்புகளும் ஈடுபாட்டைக் காட்டுகின்றன. அல்லது அதைக் குழப்புகின்றன. அவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவைக் குழப்பும் தரப்புகள் அல்லது அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் தரப்புகள் பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

முதலாவது காரணம் தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு ஏற்கனவே தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஒன்று என்பது. குமார் பொன்னம்பலம் சிவாஜிலிங்கம் போன்றவர்கள் அதில் ஏற்கனவே தோல்வி கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. குமாரும் சிவாஜியும் அதை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு முன்னெடுக்கவில்லை. அவர்கள் தமிழ் வேட்பாளர்களே தவிர தமிழ் தரப்பில் பெரும்பாலானவர்களின் விருப்பங்களை பிரதிபலித்த பொது வேட்பாளர்கள் அல்ல.

ஆனால் இப்பொழுது பேசப்படுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர் தமிழ் மக்களின் தேசிய ஐக்கியத்தின் குறியீடு. இலங்கை அரசாங்கம் நடத்தும் ஒரு தேர்தலையே தமிழ் மக்கள் மறைமுக பொதுசன வாக்கெடுப்பாக மாற்றலாமா என்ற ஒரு ஜனநாயகப் பரிசோதனை அது. தமிழ்ப் பொது வேட்பாளர் தேர்தலில் வென்று ஜனாதிபதியாக வரப் போவதில்லை. ஆனால் பெருமளவுக்கு தமிழ் வாக்குகளை அவர் திரட்டும் பொழுது அவர் தமிழ்க் கூட்டு மனச்சாட்சியின் குறியீடாகப் பார்க்கப்படுவார். தமிழ்ப்பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவார் என்ற கற்பனையோடு யாரும் தமிழ் வேட்பாளரை நிறுத்தவில்லை. அவர் சிங்கள வேட்பாளர்களின் வெற்றியை சோதனைக்கு உள்ளாக்குவார் என்ற ஒரு பேர வாய்ப்பு அதில் உண்டு. அதைவிட முக்கியமாக அவர் தேர்தலில் வெல்லப் போவதில்லை. ஆனால் அவர் தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்ஷம் ஒரு திரளாகத் திரட்டுவார்.

இரண்டாவது காரணம் தமிழ்ப் பொது வேட்பாளர் தோல்வியுற்றால் அது தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளின் தோல்வியாகக் காட்டப்படும் என்பது. உண்மைதான். ஆனால் தேர்தல் என்று வந்தால் வெற்றி மட்டும் தான் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன் வைத்து தமிழ்த் தரப்பை ஒன்றிணைப்பதற்கான மிக வலிமையான ஒரு செய்முறையாக அது இருக்கும் என்பதே வெற்றி தான். அங்கு தேர்தல் வெற்றியை மட்டும் வைத்து அந்த முயற்சியின் இறுதியான விளைவை மதிப்பிட வேண்டியதில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் இம்முறை பொது வேட்பாளர் என்ற கோரிக்கை மேற்பரப்புக்கு வந்திருப்பது ஒரு வெற்றி. அதை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு எப்படி மேலே உயர்த்துவது என்று தமிழ்த்தரப்பு சிந்தித்து ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

மூன்றாவது காரணம்இஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களைத் தூண்டிவிடுவார் என்பது. சம்பந்தர் திரும்பத் திரும்ப அதைச் சொல்லுகிறார். தமிழரசு கட்சிக்குள் ஒரு பகுதியினரும் அதைக் கூறுகிறார்கள். அவ்வாறு தூண்டப்படும் சிங்கள வாக்காளர்கள் ராஜபக்சக்களுக்கு வாக்களிப்பார்கள் என்றும் எனவே ராஜபக்சக்களை வெற்றி பெற வைப்பதற்குத் தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுகிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டினால் அல்லது தமிழ்மக்கள் தனித்து முடிவு எடுத்தால் அது சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இங்குள்ள அடிப்படைக் கேள்வி என்னவென்றால் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் இப்பொழுது மட்டும் என்ன தூங்கிக் கொண்டா இருக்கிறது? அப்படி என்றால் விகாரைகளைக் கட்டுவதும் தமிழ் மரபுரிமைச் சின்னங்களை ஆக்கிரமிப்பதும் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிப்பதும் யார்?

சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் கோபித்துக் கொள்ளும் அல்லது அது தன்னை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளும் என்று பயப்பட்டால் தமிழ் மக்கள் எதிர்ப்பு அரசியலையே கையில் எடுக்கக்கூடாது. தமிழ்த்தேசியம் என்ற வார்த்தையெல்லாம் பயன்படுத்தக கூடாது. போராட்டம் சுதந்திரம் என்றெல்லாம் பிரகடனங்களைச் செய்யக் கூடாது.

அதேசமயம் தமிழ்ப் பொது வேட்ப்பாளர் ராஜபக்சக்களை வெல்லவைப்பார் என்று பதட்டமடைபவர்களில் ஒரு பகுதியினர் வெளிப்டையாகச் சொல்லாத ஒரு விடயம் என்னவெனில் சஜித்துக்குக் கிடைக்கும் தமிழ் வாக்குகளை பொது வேட்பாளர் கவர்ந்து விடுவார் என்பது.

நாலாவது காரணம் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துகிறவர்கள் யாரோ ஒரு சிங்கள வேட்பாளரோடு டீல் செய்ய விரும்புகிறார்கள் என்ற சந்தேகம். இருக்கலாம். அதற்கு வாய்ப்புகள் உண்டு. அதே நேரம் அது தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் என்ன என்பதில் தான் தங்கி இருக்கின்றது. ஏனென்றால் தமிழ்ப் பொது வேட்பாளரோடு ஏதோ ஒரு டீலுக்கு வரும் சிங்கள வேட்பாளர் சிங்கள பௌத்த வாக்குகளை இழக்க வேண்டி வரும் என்பதே இலங்கைத் தீவின் கள யதார்த்தமாகும். சரத் பொன்சேகாவுக்கு அதுதான் நடந்தது. மைத்திரிக்கு அது நடக்கக்கூடாது என்பதற்காகத் தான் சம்பந்தர் மையால் உடன்படிக்கை எழுதுவதற்கு பதிலாக இதயங்களுக்கு இடையில் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் இலக்கியத்தனமாகப் பேசினார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் உச்சமான கோரிக்கையை முன் வைத்தால் (20ம் பக்கம் பார்க்க)

# இந்தியாவின் பாதுகாப்பு இராஜதந்திரம்

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



அண்மையில் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய இந்தியத் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இரண்டு முக்கியமான விடயங்களை குறிப்பிட்டிருந்தார். கொழும்பின் மிக நம்பகரமான நண்பனாகவும், நம்பகத்தன்மையுள்ள பங்காளியாகவும் இந்தியா இருக்கும் என்பது அவர் குறிப்பிட்ட முதலாவது விடயம்.

இலங்கை போன்ற நட்பு நாடுகளுக்கு இந்தியா நவீன பாதுகாப்பு கருவிகளை வழங்கத் தயாராக இருக்கிறது என்பது அவர் குறிப்பிட்ட இரண்டாவது விடயம். சிங்களத் தலைவர்கள் மற்றும் சிங்கள மக்கள் மத்தியில் இந்தியா தொடர்பான, சந்தேகங்களும் நம்பிக்கையீனங்களும் நீண்ட காலமாகவே இருந்து வருகின்ற நிலையில், இந்தியத் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, அவர்களுக்கு புதிய நம்பிக்கையை கொடுக்க முனைந்திருக்கிறார். சிங்களவர்கள் மத்தியில் இந்தியா தமிழர்களுக்கு தனிநாட்டை உருவாக்கிக் கொடுக்குமோ என்ற பயம் இருந்தது. இலங்கையை தங்களின் இன்னொரு மாநிலமாக இணைத்துக் கொள்ளுமோ என்ற அச்சம் இருந்தது.

இலங்கையின் துறைமுகங்களையும், வளங்களையும் கைப்பற்றிக் கொள்ளுமோ என்ற பயமும் இருக்கிறது. இலங்கையின் தேர்தல்களில் இந்தியா தலையீடு செய்கிறதோ இல்லையோ, இந்தியா தலையிட்டதாக வெளியாகின்ற தகவல்கள் எல்லாமே, சிங்கள தலைவர்கள் மற்றும், சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அச்சத்தின் அடிப்படையிலானவை தான். இப்போதும் கூட இந்தியா தங்களுக்குச் சார்பான ஒருவரையே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற வைக்கும் என்ற நம்பிக்கை, சிங்களவர்கள் மத்தியில் மட்டுமன்றி, தமிழர்களிடமும் இருக்கிறது. இதற்கு அடிப்படை, இலங்கையின் மீது இந்தியா தனது செல்வாக்கைப் பிரயோகிக்கிறது, பிரயோகிக்கவே முயற்சிக்கும் என்ற கருத்தியல் தான்.

சீனாவுடன் இலங்கை நட்புறவு கொண்டிருப்பது, இந்தியாவுக்கு பிடிக்கவில்லை. அதனால் தான் அடிக்கடி சீனா தொடர்பான விடயங்களில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது. சீனாவின் தலையீடுகளைச் சமாளித்து, இலங்கையை தங்களின் கைக்குள் வைத்திருப்பதற்கு புதுடில்லி படாதபாடு பட வேண்டியிருக்கிறது .இந்தச் சூழலில் தான், இலங்கைக்கு நம்பிக்கையூட்டும் கருத்துக்களை வெளிப்படுத்தியிருக்கிறார் சந்தோஷ் ஜா. எப்போதும் நம்பகரமான நண்பனாகவும், நம்பிக்கையான பங்காளியாகவும் இந்தியா இருக்கும் என்று அவர் உறுதியளிக்கிறார்.

இதன் ஊடாக அவர், புதுடில்லியை கொழும்பு நம்ப வேண்டும், அதன் நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார். புதுடில்லியை கொழும்பு நம்புகிறதோ இல்லையோ, கொழும்பு, நம்பிக்கைக்கு பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே இந்திய உயர்ஸ்தானிகரின் அதிகமான எதிர்பார்ப்பு.

சீனா விடயத்தில், இந்தியாவின் நலன்களுக்கு விரோதமாக இலங்கை முடிவுகளை எடுக்கக் கூடாது. தலையீடுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்பே அவரிடம் மிகையாக இருக்கிறது. அதனை நேரடியாக வெளிப்படுத்தாமல், எப்போதும் நம்பகரமான நண்பனாகவும், நம்பிக்கையான பங்காளியாகவும் இந்தியா இருக்கும் என்ற வாக்குறுதியை கொடுப்பதன் மூலம், பதிலுக்கு அதே உறுதிமொழியை பெற்றுக் கொள்ள அவர் முயன்றிருக்கிறார். இந்தியத் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இந்தக் கருத்தை வெளிப்படுத்திய இடத்துக்கும். அவரது இரண்டாவது கருத்துக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்தியாஇலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பில் புதிய வாய்ப்புகளை கண்டறிதல், புதிய பிணைப்பை உருவாக்குதல் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நடத்தப்பட்ட பாதுகாப்பு கருத்தரங்கில் தான் இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இந்தக் கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது, கொழும்பில் உள்ள இந்தியத் உயர்ஸ்தானிகரகம் தான். பாதுகாப்புக் கருவிகளின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் இருதரப்பு ஒத்துழைப்புவை மேம்படுத்துவதற்காகவே இந்தக் கருத்தரங்கு, ஏற்பாடு செய்யப்பட்டது.



கடந்த ஆண்டுகளிலும் இவ்வாறான கருத்தரங்குகள் ஒழுங்குபடுத்தப்பட்டன. வெளிப்பார்வைக்கு இது, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கானதாக தோன்றலாம். ஆனால் உண்மை அப்படியல்ல, இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்வது தான் இதன் அடிப்படை இலக்கு. இந்த நிகழ்வில் இந்தியத் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உரையாற்றிய போது, குறிப்பிட்ட இரண்டாவது முக்கிய விடயம், அது தான். இலங்கை போன்ற நட்பு நாடுகளுக்கு இந்தியா நவீன ஆயுத தளபாடங்களை விநியோகிக்கத் தயாராக இருக்கிறது என்று அவர் கூறியிருந்தார்.

இலங்கையில் போர் நடந்து கொண்டிருந்த காலத்தில், சீனாவும், பாகிஸ்தானுமே பிரதான ஆயுத விநியோக நாடுகளாக இருந்தன. அமெரிக்கா, இஸ்ரேல், ரஷ்யா, உக்ரேன், ஆர்ஜென்ரீனா போன்ற பல்வேறு நாடுகளினது ஆயுதங்கள், போர்த் தளபாடங்கள், இலங்கைப் போரில் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக விமானங்கள், கடற்படைக் கப்பல்கள் போன்றவற்றை இந்த நாடுகளே பிரதானமாக வழங்கின. ஆனால், போர்முனையில் நாளாந்தம் பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள், பீரங்கிகள், குண்டுகள், ரவைகள் போன்றவற்றை இலங்கைக்கு அதிகளவில் சந்தைப்படுத்தியது, சீனாவும் பாகிஸ்தானும் தான். இந்த நாடுகள், அவசரத் தேவைகளின் போதும், கைகொடுத்து உதவின. கடனுக்கும் ஆயுதங்களை விநியோகித்தன. இதனால், போர்க்காலத்திலேயே இந்த நாடுகளுடன் இலங்கை தனது பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொண்டது. போர் நடந்த காலப்பகுதியில் இந்தியாவிடமும், இலங்கை ஆயுத உதவிகளைக் கோரியது. ஆனால் இந்தியா அப்போது ஆயுதங்களைக் கொடுத்து உதவக் கூடிய நிலையில் இருக்கவில்லை. அப்போது, இலங்கைப் போருக்குப் பொருத்தமான ஆயுதங்களை வழங்கக் கூடிய நிலையில், அதாவது விற்கக் கூடிய நிலையில் இந்தியா இருக்கவில்லை. இந்தியாவின் ஆயுத தளபாட உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மட்டுப்படுத்தப்பட்டளவில் இருந்த காலம் அது. இந்தியாவின் தேவைகளுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டது. அடுத்து இலங்கையிடம் இருந்து போர்த் தளபாடங்களுக்கு ஏற்ற வெடிபொருட்களை இந்தியா விநியோகிக்க முடியாத நிலையில் இருந்தது. அதை விட இலங்கைப் போர் இந்தியாவில் உணர்வு ரீதியாக ஒன்றாக மாறியிருந்தது.

குறிப்பாக தமிழகத்தில், இந்தப் போருக்கு கடும் எதிர்ப்புக் காணப்பட்டது. தமிழர்களைக் கொன்றொழிக்கும் போரை நிறுத்தக் கோரி தமிழ்நாட்டில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. தமிழக அரசியல் கட்சிகள், போரை நிறுத்துமாறு மத்திய அரசிடம் வலியுறுத்தின. இந்தியா அந்தப் போரை நிறுத்து வதில்லை என உறுதி பூண்டிருந்த போதும், போருக்கான ஆயுதங்களை வழங்க முடியாதிருந்தது. அவ்வாறு ஆயுதங்களை வழங்கினால் தமிழகத்தின் எதிர்ப்புகளை சம்பாதிக்க வேண்டியிருக்கும் என்ற நிலை காணப்பட்டது.

அதனால் இலங்கை கேட்ட ஆயுதங்களைக் கூட இந்தியா வழங்கவில்லை ஆனாலும், இரண்டு சந்தர்ப்பங்களில் இந்தியா ஆயுத தளபாடங்களை இலங்கைக்கு வழங்கியது. சர்வதேச கடல் வழி விநியோகத்தை விடுதலைப் புலிகள் தீவிரப்படுத்திய நிலையில், அதனை முறியடிப்பதற்காக இலங்கைக் கடற்படைக்கு, நவீன ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்களை இந்தியா வழங்கியது. இது முதல் சந்தர்ப்பம் அதற்குப் பின்னர், 2007இல் விடுதலைப் புலிகள் விமானங்களைப் பயன்படுத்தி குண்டுத் தாக்குதல்களை நடத்த தொடங்கியதும், இந்தியா தனது சொந்த தயாரிப்பான இந்திரா ரக ராடர்களையும், எல்70 ரக விமான எதிர்ப்பு பீரங்கிகளையும் இலங்கைக்கு வழங்கியது. இவையிரண்டும், இலங்கையின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டவை மாத்திரமன்று, தனது பாதுகாப்புக்கு, விடுதலைப் புலிகளால் அச்சுறுத்தல் வந்துவிடக் கூடாது என்பதற்காகவும் தான் அவற்றை இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா வழங்கியது.

ஆனால் போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு(22ம் பக்கம் பார்க்க)



# கோட்டா பயன்படுத்திய வாகனம் ஏற்படுத்தியுள்ள சர்ச்சைகள்!

மக்களின் ஜனாதிபதி என்ற கோஷங்களோடு 69 இலட்சம் வாக்குகள் பெற்று கோட்டாபய அரியணை ஏறியவர் ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதிகளுக்கு முன்னுதாரணமாக மிக எளிமையான நிர்வாகியாக இருப்பேன் என மக்கள் முன்பாக சூளுரைத்தவர். ஆடம்பர வாகனங்களோ மேலதிக பாதுகாப்பு அதிகாரிகளோ எனக்குத் தேவையில்லை.. எனக்கு வாக்களித்தவர்களே எனது பாதுகாவலர்கள்' என மக்கள் மனதை தொட்டு அரசியலில் அடியெடுத்து வைத்தார்.

அமைச்சர்களுக்கான மேலதிக சொகுசு வாகன இறக்குமதிக்கு தடை விதித்தார். அரச திணைக்களங்கள், நிறுவனங்களில் மேலதிக செலவுகளை குறைக்கும்படி கண்டிப்பான உத்தரவிட்டார். முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பாவித்த பென்ஸ் காரையே பாவித்தார். ஆனால் அவர் ஜனாதிபதியாவதற்கு முன்னர் பாவித்த ரேஞ் ரோவர் வோக் ரக சொகுசு வாகனம். (Range Rover vogue) தான் இப்போது அவருக்கு கடும் தலைவலியாக மாறியுள்ளது.

அக்காலகட்டத்திலேயே அந்த ரக வாகனத்தின் விலை 7கோடிக்கும் அதிகமாகும். அவர் பாவித்த ரேஞ் ரோவர் வோக் ரக வாகனத்தின் இலக்கம் CBM 1949 ஆகும். இந்த வாகனத்தை கடந்த வருடம் வாங்கியிருப்பவர் பிரபல நடிகையும் மொடல் அழகியும் அழகு சாதன பொருட்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருபவருமான பியூமி ஹன்சமாலி, இவரது முகநூல் பக்கம் சென்று பார்த்தால் அவர் வாழ்ந்து வரும் சொகுசு வாழ்க்கையை அறியலாம். கடந்த வருடம் மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமன்று அவர் தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் 'எனது இரண்டாவது வாகனத்



தின் சாவி இன்று கிடைக்கப் பெற்றது. வாழ்க்கையை வெல்வதற்கு முன்னோக்கிச் செல்லுங்கள். இனிய மகளிர் தின வாழ்த்துகள் ' என பதிவிட்டிருந்தார்.

கொழும்பு ஜாவத்தை பகுதியிலுள்ள, விலை உயர்ந்த சொகுசு வாகனங்களை விற்பனை செய்யும் நிலையமொன்றிற்கு முன்பதாக அந்த வாகனத்தின் சாவியைப் பெற்றுக் கொள்வது போன்ற படத்தையே பியூமி பதிவேற்றிருந்தார். எனினும் அந்த வாகனம் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபாயவுடையது என்பதை எவரும் அப்போது அறிந்திருக்கவில்லை.

சில தினங்களுக்குப் பின்னரே இந்த விடயம் சமூக ஊடகங்களில் கசிந்தது. எனினும் இதற்கு பியூமி ஹன்சமாலி மறுப்பெதுவும் தெரிவிக்கவில்லை. 'ஆம் அது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய பயன்படுத்தியது தான்' என சில ஊடகங்கள் அவரிடம் எழுப்பிய கேள்விக்கு அவர் பதிலளித்திருந்தார்.

பொருளாதார நெருக்கடிகளுக்குப் பிறகு இலங்கை அரசாங்கம் வாகன இறக்குமதியை நிறுத்தியது. இதன் காரணமாக உள்ளூரில் பாவித்த வாகனங்கள் இரண்டு மடங்கு விலை அதிகரிப்பை கண்டன. குறித்த ரேஞ் ரோவர் வாகனமானது அச்சந்தர்ப்பத்தில் 8 தொடக்கம் 10 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்டிருக்க வேண்டும் என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டி



ருந்தன. சில வாகன இறக்குமதியாளர்களும் இந்த விலையை உறுதிப்படுத்தியிருந்தனர். ஆனால் இந்த சர்ச்சைகள் குறித்து கோட்டாபய தரப்பிலிருந்து எந்த கருத்துகளும் வெளிப்பட்டிருக்கவில்லை.

இப்போது இந்த விவகாரத்தை கையிலெடுத்துள்ளார் சமூக செயற்பாட்டாளர் சஞ்சய மஹாவத்த. இவர் 'மகே ரட்ட' (எனது நாடு) என்ற அமைப்பின் தலைவராக உள்ளார். அரசியல்வாதிகளின் ஊழல் செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுத்து வரும் இவரே கடந்த வருடம் டிசம்பர் 31 ஆம் திகதி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் வீட்டுக்கு முன்பாக மலர் வளையம் வைத்தவர்.

சுகாதார அமைச்சில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் தொடர்பில் இவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு நவம்பர் மாதமளவில் முறைப்பாடொன்றை செய்திருந்தார். அது குறித்து விசாரணைகளை முன்னெடுப்பதில் பொலிஸார் அக்கறை கொள்ளவில்லையென குற்றப்புலனாய்வு தலைமை காரியாலயத்துக்கு முன்பதாக இவர் தேங்காய் உடைத்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தினார். அச்சம்பவத்துக்காக அவர் கைது செய்யப்பட்டார் என்பதும் முக்கிய விடயம்.

சஞ்சய மஹாவத்த தற்போது இந்த ரேஞ் ரோவர் வாகன விவகாரம் குறித்து கடந்த 17 ஆம் திகதி சட்டவிரோத சொத்துகள் பற்றி விசாரிக்கும் பிரிவில் முறைப்பாடொன்றை செய்துள்ளார். அவர் இரண்டு விடயங்களை இங்கு முன் வைத்துள்ளார். மொடல் அழகி பியூமியின் சொகுசு வாழ்க்கையின் பின்னணி என்ன என்பதும் அவருக்கு விலை உயர்ந்த காரை வாங்கும் அளவுக்கு பணம் எவ்வாறு வந்தது என்பது ஒரு விடயம். அடுத்ததாக அவர் கூறும் விடயம் முக்கியமானது. அது அரசியல்வாதிகளின் கறுப்புப் பணம் பற்றியதாகும். இவ் வருடம் தேர்தல் இடம் பெறவுள்ளதால் மக்களை கவர்வதற்கு அரசியல்வாதிகள் தாம் பதுக்கி வைத்திருக்கும் கறுப்புப் பணத்தை வெளியில் எடுக்கும் கால கட்டமாகும். அரசியல்வாதிகளின் கறுப்புப் பணத்தை பணச்சலவை செய்வதற்கு சமூகத்தில் பிரபலமாக இருப்பவர்களை பயன்படுத்திக் கொள்கின்றார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக சஞ்சய கருத்து வெளியிட்டுள்ளார். தமது பண மோசடி நடவடிக்கைகளுக்கு அரசியல் வாதிகள் இவ்வாறானவர்களை பயன்படுத்துகின்றார்களா என்ற சந்தேகம் நியாயமானது. கோட்டாபயவின் வாகனம் இவருக்கு எவ்வாறு கிடைத்தது? அதை வாங்குமளவிற்கு பணம் அவருக்கு எப்படி வந்தது? அவர் சொகுசு மனையில் வாழ்ந்து வருகின்றார். தினமும் இலட்சக்கணக்கில் பணத்தை செலவு செய்கிறார்.

அழகு சாதன பொருட்களை விற்பனை செய்யும் ஒருவரால் இவ்வளவு மதிப்பு மிக்க சொத்துகளை எப்படி வாங்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது. 'தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகளின் செலவினங்கள் குறித்து நாம் மிகவும் கவனமாக அவதானித்து வருகின்றோம். ஆகவே எமது முறைப்பாடு குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதே எமது நோக்கம்' என அவர் தெரிவித்துள்ளார்.



**கட்டுரையாளர்:-**
**தாயகத்தில் இருந்து**
**- யசீந்திரா -**




நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு காரணகர்த்தாக்கள் என ஏற்கனவே ராஜபக்ஷ சகோதரர்கள் மீது உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கொரோனா நெருக்கடிகளுக்குப் பின்னர் ராஜபக் சகோதரர்களுக்கு கடல் கடந்த நாடுகளிலும் ஏராளமான சொத்துகள் இருப்பதாக பல தகவல்கள் சமூக ஊடகங்களில் பரவின. ஆனால் அது குறித்து எவையும் நிரூபிக்கப்படவில்லை.

மஹிந்த ஜனாதிபதியாக விளங்கிய இரு சந்தர்ப்பங்களிலும் அவரது குடும்பத்தினர் சொகுசு வாழ்க்கையில் மிதந்தனர் என்பதை நாடே அறியும். இந்நிலையில் அவர்களது குடும்பத்தின் அரசியல் வீழ்ச்சிக்கு காரணமான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை சம்பந்தப்படுத்தி புதிய குற்றச்சாட்டுகள் கிளம்பியுள்ளன. முன்னதாக அவர் எழுதிய 'ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை வெளியேற்றுவதற்கான சதி' என்ற புத்தகத்தினால் கடும் விமர் சனங்களை சந்தித்திருந்தார். நெருக்கடிகளுக்கு தான் எந்த விதத்திலும் காரணகர்த்தா இல்லை என்பதை அந்த நூலில் அவர் வலியுறுத்தியிருந்தார்.(20ம் பக்கம் பார்க்க)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சூடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இஸ்ரேலின் இரத்தக் கறை படிந்த கரங்களை உலக வல்லரசுகளாலும் கழுவ முடியாது

கட்டுரையாளர்:-
கனடாவில் இருந்து
- சாம்.ரமேஸ்குமார் -

யூதர்கள் மனிதர்கள் அல்ல அவர்கள் நிச்சயம் இந்த பூமிப் பந்திலிருந்து அழிக்கப்பட வேண்டியவர்கள் என்று ஜெர்மனிய சர்வதிகாரி ஹிட்லர் தனது புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். அதனால் தான் ஹிட்லர் 60 லட்சம் யூதர்களை அழிக்க கட்டளையிட்டார் என சில மேற்குலக அரசியல் ஆய்வாளர்கள் இன்றும் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

யூத இனத்துக்குள்ளே நான்தான் யூதர்களின் ராஜவென தன்னை பிரகடனப் படுத்திய யேசு கிறிஸ்துவையே கள்ளன், கபடன், பொய்யன் எனக் கூறியது மட்டுமல்லாமல். தங்கள் இனத்தினுடைய ஒரு தேவகுமாரனைக் காட்டிக் கொடுத்து அவரின் சிலுவை மரணத்திற்கும் காரணமாய் இருந்தவர்களும் இந்த யூதர்கள் தான் என்பதை எவரும் எளிதில் மறுத்து விட இயலாது.

யேசு கிறிஸ்து பிறப்பதற்கு 600 வருடங்களுக்கு முன் அவர் சிலுவையில் அறையப்படுவார் என்ற தீர்க்க தரிசனம் வார்த்தைகளாக உரைக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு செயலுக்கும் இந்த பிரபஞ்சத்தில் ஒரு எதிர் வினை உண்டு என்பதையும் மானுடம் குற்றங்களைப் புரிந்து விட்டு மாண்பு மிகு மன்னிப்பு என்ற போர்வையில் இருந்து ஒரு போதும் எளிதில் தப்பி விட முடியாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்துவுக்கு முன்னும் சில தீர்க்கதரிகளை யூதர்கள் கொலை செய்திருக்கின்றார்கள் என்ற பதிவுகளை வரலாற்றில் அங்காங்கே காணக் கூடியதாக இருந்தாலும். யேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமே யூதர்களின் சுயரூபத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது எனலாம்

மத்திய கிழக்கில் பிரித்தானியாவின் ஆதரவுடன் 1948ல் யூதர்கள் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியில் இஸ்ரேல் என்ற ஒரு தனி நாட்டை உருவாக்கி பூகோள வல்லரசான அமெரிக்காவின் பூரண ஆசீர்வாதத்துடன் தன்னை கட்டமைத்து எதிரிகளிடம் இருந்து தற்காத்து வளர்ந்து வந்தாலும் யேசு கிறிஸ்துவின் இரத்தக்கறை படிந்த அவர்களின் கரங்களை எந்த உலக வல்லரசுகளாலும் ஒரு போதும் கழுவி விட முடியாது. பாவத்தின் சம்பளம் மரணம் என்பதே வேதாகமத்தின் முக்கிய செய்தியாகும்.

சமகாலத்தில் சர்வதேச ஊடகவியாளர்களும், அரசியல் மற்றும் மத ஆய்வாளர்களும், போரியல் நிபுணர்களும் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மாற்று முகமாகத் திகழும் இஸ்ரேலைப் பற்றிய அளவுக்கதிகமான ஒரு மாய விம்பத்தை சர்வதேச நாடுகள் முன் கட்டமைத்து வந்துள்ளார்கள். அரசியல் ரீதியாக, இராஜ தந்திர ரீதியாக ஆயுத ரீதியாக, இராணுவ ரீதியாக எவராலும் நெருங்க முடியாத தேசம் என்பதே அந்த மாய விம்பமாகும்.



யூதர்களின் எல்லைகளை எதிரி நாட்டினுடைய ஒரு துப்பாக்கி தோட்டா கூட கனவிலும் தொட்டுப் பார்க்க முடியாது என கூறிய போரியல் வல்லுனர்களை சற்று பிரமிக்கச் செய்தது கடந்த 2023 அக்டோபர் மாதம் 7ம் திகதி நடைபெற்ற பலஸ்தீன விடுதலை இயக்கமான ஹமாஸின் இஸ்ரேல் மீதான அதிரடி ஏவுகனைத் தாக்குதல்கள்.

இஸ்ரேலின் நவீன வான் பாதுகாப்பு கவசமான அயன்டோமின் நவீன தொழில் நுட்பத்தையும் மீறி 20 நிமிடங்களில் 5000 ஏவுகனைகளை மழையாக பொழிந்து தள்ளியது ஹமாஸ் கற்பனையிலும் கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒரு அதிரடித் தாக்குதல் இதுவாகும்

வல்லவனுக்கு வல்லவன் உலகில் உண்டு என்பதை ஹமாஸின் மூத்த தலைவர்கள் நமாஸ் செய்து சர்வதேசத்தின் முன் நிரூபித்துக் காட்டினார்கள்.

இஸ்ரேலின் மீது சர்வதேச இராணுவ வல்லுனர்களால் கட்டமைக்கப்பட்ட ஒரு மாய விம்பம் கடந்தாண்டின் இறுதிப் பகுதியில் ஹமாஸ் மூலமாக மெதுவாக அகலத் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நடப்பாண்டு ஏப்ரல் 13ம் திகதி இரவு இஸ்ரேல் மீது ஈரானின் புரட்சிகர காவல் படை ட்ரோன்கள் மற்றும் ஏவுகனைகள் மூலம் இஸ்ரேலின் இலக்குகள் மீது அதிரடித் தாக்குதல்களை நடத்தியது. அமெரிக்காவின் துணையுடன் தற்காப்புத் தாக்குதல்களை மேற் கொண்டு ஒருவாறு தன்னை ஈரானிடம் இருந்து தற்காத்துக் கொண்டது.

என்ன தான் நவீன ஆயுதங்களை யூதர்கள் தங்கள் நாட்டின் சொந்த இறையாண்மைக்காக உருவாக்கினாலும் அந்த நவீன ஆயுதங்களினுடைய சில பலவீனங்களை நவீன அறிவியல் கொண்டு அதை அரபுலகம் சில சமயங்களில் பலமிழக்கச் செய்து விடுகின்றது. அதுவே ஹமாஸ் மற்றும் ஈரானின் இஸ்ரேல் மீதான அண்மைய தாக்குதல்களின் வெற்றிகள் நிரூபிக்கின்றன.

இன்று அரபு உலகங்களால் சுற்றி வளைக்கப்பட்டு இருக்கும் இஸ்ரேல் அமெரிக்காவின் தயவில் தான் தன்னை மத்திய கிழக்கில் ஒரு சண்டியனாக உருமாற்றி பலஸ்தீனத்தின் மீது வார்த்தைகளால் விவரிக்க முடியாத ஒரு மனித பேரவலத்தை இந்த நூற்றாண்டில் நிகழ்த்தி வருகின்றது. என்று பூகோள வல்லரசு என்ற நிலையில் இருந்து அமெரிக்கா சற்று தளம்புகின்றதோ அன்றே இஸ்ரேல் என்ற நாடே இருக்காது என்பது மேற்குலக இராணுவ வல்லுனர்களின் அசைக்க முடியாத ஒருமித்த கருத்தாகும்.

இன்றைய அரசியல் போரியல் நிலவரப்படி மத்திய கிழக்கில் இஸ்ரேலைக் கண்டு அஞ்சும் அளவுக்கு எந்த அரபு நாடுகளும் இல்லை. இஸ்ரேல் சுதாகரிக்கும் முன்பே அரபுலகம் சுதாகரித்துக் கொண்டு இஸ்ரேலுக்கு நிகரான சில இராணுவச் சமநிலைகளை உருவாக்கி விட்டிருப்பதும். இஸ்ரேலை எதிர்காலத்தில் ஆட்டம் காண வைத்து விடுமோ என்பதே அமெரிக்காவின் கேள்வியாய் உள்ளது.

புதிய வேதாகமத்தின் சிந்தனைப்படி என்ன தான் மன்னிப்பை யேசு கிறிஸ்து வழங்கினாலும் யூதர்களின் மனதில் இன்றும் கூட யேசுவின் மரணத்திற்கு தாங்களும் ஒரு தவிர்க்க முடியாத காரணமென்ற ஒரு குற்றவுணர்வு அவர்கள் மனங்களில் இழையோடிப் போய்யிருப்பதை சர்வதேச மத ஆய்வாளர்கள் மத அரசியலுக்கு அப்பால் சர்வதேசத்தின் முன் தெளிவுப் படுத்துகின்றார்கள்.

மானுட சமூகத்தின் மனதில் படிந்த குற்றவுணர்வே தாங்கள் செய்த தவறுகளில் இருந்து அவர்களைக் கொல்லும் என்பது பிரபஞ்சத்தின் தத்துவ நியதியாக இருக்கையில் அதற்கு யூதர்கள் மட்டுமல்ல ஏன் ஹிட்லரும் கூட விதி விலக்கல்ல என்பதை தங்கள் தேசிய சுயநிர்ணய உரிமைக்காக போராடும் ஒவ்வொரு சிறுபான்மை இனங்களும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களாகும்.

# கைது செய்யத் தயாராக இருந்த இன்டர்போல்! இலங்கை செல்லாமலே நழுவிய ஈரான் அமைச்சர்

1994ம் ஆண்டு அர்ஜென்டினாவில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் தொடர்பில் இலங்கைக்கு ஈரான் ஜனாதிபதியுடன் விஜயம் மேற்கொள்ளவிருந்த ஈரானின் உள்துறை அமைச்சரை கைதுசெய்ய வேண்டும் என ஆர்ஜென்டினா வேண்டுகோள் விடுத்திருந்த நிலையில், அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவில்லை ஏஎவ்பி செய்தி வெளியிட்டுள்ளது.

1994ம் ஆண்டு ஆர்ஜென்டினாவில் தலைநகரில் உள்ள யூத சமூகத்தின் நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட வாகன தற்கொலை குண்டுதாக்குதலில் 85 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலிற்கு ஈரானின் தற்போதைய உள்துறை



அமைச்சர் அஹமட் வஹ்டியே காரணம் என குற்றம்சாட்டப்பட்டுள்ளது

அவர் ஈரான் ஜனாதிபதியுடன் பாகிஸ்தான் சென்ற பின்னர் இலங்கை வருவதற்கு திட்டமிட்டிருந்தார் இந்த நிலையில் இவரை கைதுசெய்யவேண்டும் என இன்டர்போல் சர்வதேச எச்சரிக்கையொன்றை விடுத்திருந்தது. ஆர்ஜென்டினாவின் வேண்டுகோளை தொடர்ந்தே இன்டர்போல் இந்த வேண்டுகோளை விடுத்திருந்தது.

இலங்கையும் பாகிஸ்தானும் ஈரானின் உள்துறை அமைச்சரை கைது செய்ய வேண்டும் எனவும் ஆர்ஜென்டினா வேண்டுகோள் விடுத்திருந்தது.

எனினும் அவர் செவ்வாய்கிழமை ஈரானிற்கு சென்று விட்டார் என ஈரானின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை இலங்கை வந்த ஈரானிய குழுவில் அஹமட் வஹ்டி இடம் பெற்றிருக்கவில்லை என இலங்கையின் வெளிவிவகார அமைச்சக பேச்சாளர் ஒருவர் ஏஎவ்பிக்கு தெரிவித்துள்ளார்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தி யோகஸ்தரும் தனது சாட்சியத்தை பதிவு செய்துள்ளார். குறித்த வழக்கு தொடர்பான விசாரணைகள் தொடர் விசாரணைகளாக மூன்று நாட்கள் முன்னெடுக்க திகதியிடப்பட்டுள்ளது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் சாட்சியம் அளிப்பதற் காக வருகை தந்த போது யாழ்.நீதி மன்ற கட்டட தொகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு காணப்பட்டதுடன் பாதுகாப்பு கடமைகளில் பொலிஸ் அதிரடி படையினரும் ஈடுபட்டிருந்தனர்.

# வங்குரோத்து நாட்டை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகள்

கட்டுரையாளர்:-
– நிலாந்தன் –

களுத்துறையில் ஒரு சுற்றுலாப் பயணி. அவர் ஒரு வெள்ளைக்காரர் ஒரு தேநீர்க் கடையில் வடை சாப்பிடுகிறார்.அவரை கடைக்குள் உபசரித்து வடையோடு இரண்டு விதமான சம்பல்களையும் கொடுத்த அந்த கடையைச் சேர்ந்த ஒருவர். அவரிடம் ஒரு வடைக்கும் ஒரு பால் தேனீருக்கும் மொத்தம் ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்.

சுற்றுலாப் பயணிக்கு அந்தத் தொகை அதிகம் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அவர் அந்த வழியால் வரும் ஆட்களை மறித்து வடையின் விலை என்னவென்று கேட்கிறார். அந்த வழியால் வந்த இரண்டு சிங்களப் பெண்கள் ஓரளவுக்கு ஆங்கிலம் கதைக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அந்த வடையின் விலை 120 ரூபாய் என்று கூறுகிறார்.

வெள்ளைக்காரர் உண்மையை கண்டுபிடித்து விட்டார் என்பதை அறிந்த கடைக்காரர் சிறு தொகையை திரும்ப கொடுக்கிறார். இந்த விடயம் ஓ டிக் டொக் காணொளியில் பரவலாகப் பகிரப்பட்டது. அதன் விளைவாக கடைக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன .

ஏற்கனவே இது போன்ற மற்றொரு சம்பவத்தில் ஒரு சுற்றுலாப் பயணியை ஒரு கொத்துரொட்டி கடைக்காரர் அவமதிக்கின்றார். சம்பவம் நடந்தது கொழும்பு புதுக்கடையில். அங்கேயும் ஒரு இடியப்ப கொத்து என்ன விலை என்று கேட்டபோது கடைக்காரர் 1900 ரூபாய் என்று கூறுகிறார். சுற்றுலாப் பயணி அதை நம்பாமல் கேள்வி கேட்டபோது கடைக்காரர் சுற்றுலாப் பயணியை நோக்கி வாயை பொத்து என்ற சமிக்கையை காட்டுகிறார். அது சமூக வலைத் தளங்களில் பரவலாக வெளிவந்தது. விளைவாக கடைக்காரர் மீது போலீசார் சட்ட நடவடிக்கை எடுத்தார்கள்.



இந்த இரண்டு விடயங்களையும் முன் வைத்து சமூக வலைத்தளங்களில் பகிடியாக ஒரு விடயம் பகிரப்படுகிறது. இனி சாப்பாட்டுக் கடைக்கு போகும் போது வீடியோவையும் ஓன் பண்ணி விட்டு சென்றால் சாப்பாட்டுக் கடைக்காரர்கள் மரியாதையாக நடந்து கொள்வார்கள் நியாயமான விலையைக் கூறுவார்கள் என்பதே அந்தப் பகிடியாகும்.

ஆனால் சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பது போல அரசாங்கம் உள்ளூர் மக்களை சாப்பாட்டுக் கடைக்காரர்களின் விடயத்தில் பாதுகாக்கும் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இது தொடர்பாக முகநூலில் ஒரு மருத்துவர் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். நட்சத்திர அந்தஸ்துள்ள சுற்றுலா விடுதிகளில் உணவின் விலை உச்சமாகத் தான் உள்ளது. சாதாரண இளநீரில் இருந்து தொடங்கி மேற்கத்திய முறையிலான உணவுகள் வரை எல்லாவற்றுக்கும் பெரிய விலை தான். ஏன் அப்படியென்று சுற்றுலாப் பயணிகள் கேட்பதில்லை. ஏனென்றால் நட்சத்திர விடுதிகளில் அது தான் விலை. அதையே தெருவோரக் கடைக்காரர் செய்தால் அது வழக்காகி விடுகிறது என்ற தொனிபட மேற்படி மருத்துவர் ஒரு குறிப்பை போட்டிருந்தார்.

இது விடயத்தில் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும்.



முதலாவது வெள்ளைத் தோலைக் கண்டால் அல்லது சுற்றுலாப் பயணிகளைக் கண்டால் உள்ளூர் வியாபாரிகள் விலையை உயர்த்திக் கூறும் ஒரு நிலைமை எப்பொழுதும் உண்டு. இது இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவும் உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பெரும்பாலானவற்றில் காணப்படும் ஒரு பொதுத் தோற்றப்பாடு. ஒரு வெளிநாட்டுப் பயணிக்கு ஒரு பொருளை டொலர் மதிப்பில் விற்க முற்படுவது. இதுத ான் புதுக் கோட்டை மற்றும் களுத்துறைச் சம்பவங்களின் பின்னணி. இது முதலாவது .

இரண்டாவது விடயம், சுற்றுலாப் பயணிகள் மட்டுமல்ல உள்ளூர் பணக்காரர்களும் சுற்றுலா விடுதிகளில் உணவு அருந்தும் பொழுது அந்த விலைப் பட்டியலைக் குறித்துக் கேள்வி கேட்பதில்லை. சில கிழமைகளுக்கு முன் யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாக அமைந்திருக்கும் ஒரு மரக்கறி உணவகத்தில் விற்கப்படும் உணவுகளின் விலைப் பட்டியல் சமூக வலைத்தளங்களில் பரவலாக வெளி வந்தது. நட்சத்திர அந்தஸ்துள்ள உணவு விடுதிகள் சாதாரண உணவுகளுக்கும் குடிபானங்களுக்கும் பல மடங்கு விலையைப் போடுகின்றன. பணக்காரர்களும் சுற்றுலாப் பயணிகளும் அதைக் கேள்வி கேட்காமல் நுகர்கிறார்கள். அதையே தெருவோரக்கடை என்று வந்தால் அல்லது தெருவோரத்தில் பொருளை விக்கும் ஏழை என்று வந்தால் ஆயிரம் நியாயங்கள் கேட்டு விலையை எப்படிக் குறைக்கலாம் என்று முயற்சிக்கிறார்கள் .

இது சமூக வலைத்தளங்களின் காலம். மனிதர்கள் நடமாடும் கமராக்களாக மாறிவிட்டார்கள். எனவே இது போன்ற செயல்கள் நடக்கும் பொழுது அது உடனுக்குடன் படமாக்கப்படுகின்றது. எடுத்த கையோடு சுடச்சுட சமூக வலைத்தளங்களில் செய்தியாக்கப்படுகின்றது. குற்றங்களைத் தடுப்பதற்கும் அநியாயங்களைத் தடுப்பதற்கும் அது உதவுகின்றது.

குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் தங்களை உள்ளூர் வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள் அல்லது சுரண்டப் பார்க்கிறார்கள் என்ற உணர்வு அதிகரித்து வருகிறது. சமூக வலைத்தளங்களின் ஆதிக்கமும் அதற்கு காரணம். இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்புக் காரணமாக மேற்சொன்ன இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் இந்த விடயத்தில் உஷாராகக் காணப்படுகின்றது. சுற்றுலா பயணிகளைக் கவர வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு ஏனென்றால் சுற்றுலாப் பயணிகள் தான் இப்பொழுது நாட்டுக்குள் டொலர்களைக் கொண்டு வரும், பொன்முட்டை இடும் வாழ்த்துக்களாகும். இந்த மாதத்தில் முதல் ஒன்பது நாட்களில் மட்டும் மொத்தம் 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். நாட்டின் பெரும்பாலான நட்சத்திர அந்தஸ்துள்ள விடுதிகள் மட்டுமல்ல சாதாரண விடுதிகளும் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகின்றன. நாட்டின் உயர்தர மதுச்சாலைகள்,தேநீர்க் கடைகள், சிற்றுண்



டிச் சாலைகள் போன்றவற்றிலும் கடற்கரைகளிலும் உல்லாசப் பயணத் தலங்களிலும் பெருமளவுக்கு சுற்றுலாப் பயணிகளைக் காண முடிகின்றது.

சுற்றுலாப் பயணிகள் அதிக தொகையாக இலங்கைக்குள் வருவதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் உண்டு. இது ஒரு அழகிய நாடு. அது முதலாவது முக்கியமான காரணம்.

இரண்டாவது காரணம், நாட்டின் நாணயப் பெறுமதி வெகுவாகக் குறைந்து விட்டது. இதனால் ஒரு வெளிநாட்டவர் தன்னுடைய நாணயத்தை இங்கே செலவழிக்கும் பொழுது குறைந்த செலவில் அதிக அளவு நன்மைகளைப் பெற முடியும். இக்காரனத்தால் இந்தியாவில் இருந்தும் சுற்றுலா பயணிகள் அதிக தொகையாக வருகிறார்கள். குறிப்பாக இந்தியாவுக்கும் மாலை தீவுகளுக்கும் இடையிலான உறவுகளில் நெருக்கடிகள் தோன்றிய பின் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையை நோக்கி ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் வெள்ளைக்காரர்களைப் போல காசை அள்ளி வீசமாட்டார்கள் என்ற ஒரு அபிப்பிராயம் சுற்றுலா விடுதி உரிமையாளர்களிடமும் உள்ளூர் வணிகர்களிடமும் உண்டு. அமெரிக்க ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளை விடவும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் சந்தை நிலவரங்கள் தொடர்பாக அதிகம் விழிப்புடன் இருப்பதும் அதற்கு ஒரு காரணம்.

இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் நாட்டின் தெற்குப் பகுதியை நோக்கியே போவதாக ஓர் அவதானிப்பு உண்டு. வடக்கு கிழக்கை நோக்கி வருபவர்களின் தொகை ஒப்பீட்டளவில் குறைவு என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள விருந்தகங்கள். சுற்றுலாத் தங்கங்களின் விருந்தோம்பும் பண்பைக் குறித்து விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க விருந்தோம்பல் பண்பாடும் அதற்குரிய விருந்தோம்பல் வலை அமைப்பும் தமிழ்ப் பகுதிகளில் குறைவு என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.அவ்வாறு சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க ஒரு சுற்றுலாப் பாரம்பரியத்தை அல்லது ஒரு சுற்றுலாப் பண்பாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான உயர் கற்கை நெறிகள் இப்பொழுது தமிழ்ப் பகுதிகளில் உண்டு.எனினும் ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் கவர்ச்சிமிகு செழிப்பான விருந்தோம்பல் பாரம்பரியம் ஒன்றைத் தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்ப முடியவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இன்னும் சில மாதங்களில் நல்லூர் திருவிழா வருகிறது. அதையொட்டி புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகரித்த தொகையில் யாழ்ப்பாணத்தை நோக்கி வருவார்கள். இனிவரும் மாதங்களில் நாட்டுக்கு அதிகம் வருவாயை ஈட்டித் தரப்போகும் தரப்புகளில் ஒன்றாக புலம்பெயர்ந்த தமிழர்கள் காணப்படுவார்கள். முன்பு புலம் பெயர்ந்த தமிழர்கள் தமது சொந்தக்காரர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்குவதுண்டு. ஆனால் இப்பொழுது இந்தப் போக்கு மாறி வருகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் சுற்றுலா விடுதிகளில் தங்குவதற்கு விரும்புகின்றார்கள்.(22ம் பக்கம் பார்க்க)

ஈரான்மீது இஸ்ரேல் நடத்தியதாகக் கூறப்படும் பதிலடியானது ஒரு தாக்குதலே அல்ல' என ஈரான் விமர்சித்துள்ளது. அது சிறுவர்களின் விளையாட்டைப் போன்றது என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் ஈரானுக்கிடையிலான போர் அபாய அச்சத்தை தணிப்பதாக இக்கருத்துகள் உள்ளன.

சிரியாவிலுள்ள ஈரானிய துணைத்தூதரகத்தின் மீது இஸ்ரேல் கடந்த முதலாம் திகதி நடத்திய தாக்குதலில் ஈரானிய இராணுவ அதிகாரிகள் உட்பட பலர் கொல்லப்பட்டிருந்தனர்.

இத்தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது கடந்த 13 மற்றும் 14ஆம் திகதிகளில் சுமார் 300 ஆளில்லா விமானங்கள்இ ஏவுகணைகளை ஈரான் ஏவியது. இவற்றில் 99 சதவீதமானவை சுட்டுவீழ்த்தப்பட்டதாகவும் இஸ்ரேலுக்கு சிறிய பாதிப்புகளே ஏற்பட்டதாக



3 சிறிய ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ஈரானிய அதிகாரி ஒருவர் தெரிவித்திருந்தார்.

ஈரான்மீது இஸ்ரேல் வெள்ளிக்கிழமை

அது ஏவுகணைத் தாக்குதல் என அமெரிக்கா தெரிவித்திருந்தது. எனினும் ஆளில்லா விமானங்களை (ட்ரோன்கள்) சுட்டு வீழ்த்தியதாக

# இஸ்ரேல் நடத்தியது ஒரு தாக்குதலே அல்ல சிறுவர் விளையாட்டு என ஈரான் விமர்சனம்

வும் இஸ்ரேல் தெரிவித்திருந்தது. எனினும் இத்தாக்குதலுக்கு பதிலடியாக ஈரான் மீது இஸ்ரேல் வெள்ளிக்கிழமை (19) அதிகாலை தாக்குதல் நடத்திய தாக அமெரிக்கா தெரிவித்தது. அன்றைய தினம் ஈரானின் இஸ்பஹான் நகரில் வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாக செய்தி வெளியாகியிருந்தது.

அதிகாலை தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறிய போதிலும் அத் தாக்குதலை தான் நடத்தியதாக இஸ்ரேல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதம் தொடர்பிலும் முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரான் கூறுகிறது.

இந்நிலையில் இது ஒரு தாக்குதலே அல்ல என ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொஸைன் அமீர் அப்துல்லாஹியன் கூறியுள்ளார். அமெரிக்காவின் என்.பி.சி. அலைவரிசைக்கு வெள்ளிக்கிழமை அளித்த செவ்வியொன்றில் இது தொடர்பாக அவர் கூறுகையில் நடந்தது தாக்குதல் அல்ல. அது ஈரானில் எமது சிறுவரகள் பயன்படுத்தும் விளையாட்டுப் பொருளான 'குவாட்கொப்டர்' களுக்கு இடையிலான மோதலைப் போன்றது. அவை ஆளில்லா விமானங்கள் அல்ல' என வெள்ளிக்கிழமை அவர் கூறியுள்ளார். ஐ.நா. பாதுகாப்புச் சபை நிகழ்வொன்றில் பங்கு பற்றுவதற்காக நியூயோர்க்குக்கு சென்றிருந்த நிலையில் அமைச்சர் அப்துல்லாஹியன் இந்த செவ்வியை அளித்துள்ளார்.

இஸ்ரேல் குறிப்பிடத்தக்கவொரு தாக்குதலை நடத்தினால் தவிர, இஸ்ரேல் மீது பதில் தாக்குதல் நடத்தும் திட்டம் ஈரானிடம் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார். ஆனால் ஈரான்மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் ஈரானின் பதிலடி துரிதமாகவும் கடுமையாகவும் இருக்கும் என அவர் கூறினார்.

அதேவேளை இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஏவுகணை, ஆளில்லா விமானத் தாக்குதல் ஓர் எச்சரிக்கை நோக்கமுடையது எனவும் அமைச்சர் அப்துல்லாஹின் கூறினார்.

'எம்மால் (இஸ்ரேலிய நகரங்களான) டெல் அவிவ் அல்லது ஹைஃபாவை தாக்கியிருக்க முடியும். இஸ்ரேலின் அனைத்து பொருளாதார துறை முகங்களையும் தாக்கியிருக்கலாம். ஆனால், எமது சிவப்புக் கோடுகள் பொதுமக்கள் ஆவர் இராணுவ நோக்கம் மாத்திரமே எம்மிடமிருந்தது' என அவர் கூறினார்.

# தூண்டில் போடும் விக்கியரும் தூர ஓடும் தலைவர்களும்

(9ம் பக்கத் தொடர்ச்சி) அதைவிடுத்து 'கேட்டால் பொது வேட்பாளராக நான் வருவேன்' என்றோ அல்லது 'அவர் தான் பொருத்தமான வர் இவர் தான் பொருத்தமானவர் 'என்று எழுந்தமானமாக அறிக்கை விடுவதோ அல்லது பொது வேட்பாளருக்கான தகுதி விதிகளைத் தனியொருவர் தீர்மானிப்பதோ அம் முன்மொழிவின் நோக்கத்தை அடைய எவ்விதத்திலும் உதவப் போவதில்லை.

பதிலாகச் சிக்கல்களையே மேலும் மேலும் தோற்றுவிக்கும். எத்தகைய அரசியல், சமூகக்கள அனுபவங்களையும் கொண்டிராத அதற்கு சற்றேனும் விரும்பமில்லாத தனிநபர்கள் சமூகப் பிரதிநிதிகளுடன் எத்தகைய ஊடாட்டத்திலும் ஈடுபடாது தங்கள் பணிமனையிலிருந்து தமக்கு விருப்பமானவர்களுக்கு அழைப்பு விடுப்பதும், நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற முன்மொழிவின் உண்மையான நோக்கத்தை அடைவதற்கானது எனக் கொள்ள முடியாது. அவை அவர் களின் தனிப்பட்ட நலன்சார் நிகழ்ச்சி நிரலாகவே கொள்ளப்பட வேண்டும். இதனை அரசியல் தலைவர்கள் மட்டுமன்றி சமூகத் தலைவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

# கோட்டா பயன்படுத்திய வாகனம்

(17ம் பக்கத் தொடர்ச்சி) அந்த சர்ச்சைகளை ஓரளவுக்கு நாடு மறந்திருந்த நிலையில் மீண்டும் அவர் பேசுபொருளாக்கியிருக்கின்றார். கோட்டாபயவினால் மொட்டு கட்சி மக்களின் செல்வாக்கை இழந்திருக்கும் நிலையில் அதை தூக்கி நிறுத்தும் பொறுப்பை புதிய தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஏற்றிருக்கின்றார். முன்னதாக அப் பதவியை வகித்த பசில் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மறுபக்கம் மீண்டும் கட்சியையும் ஏனைய ராஜபக்ஷவினரையும் வெறுக்கும் விதத்தில் சம்பவங்கள் அரங் கேறிக் கொண்டிருக்கின்றன.

கோட்டாபய தான் முழுமையாக அரசியலிலிருந்து விலகி விட்டேன் என எந்த அறிவிப்பையும் இது வரையில் வெளியிடவில்லை. அதற்கு சந்தர்ப்பங்களும் ஏற்படவில்லை. அவரை மக்களே வெறுத்து ஒதுக்கி விட்டனர். அவர் வெளியிட்ட புத்தகம் கூட ஒரு அரசியல் நகர்வு தான். இனி அரசியலில் ஈடுபடாவிட்டாலும் தனது சகோதரர் களுக்கு ஓரளவுக்குச் சரி இனவாத வாக்குகளைப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்திலேயே அவர் அந்த நூலை வெளியிட்டிருக்கலாம் என பல ஊகங்கள் வெளிக்கிளம்பியிருந்தன. தான் பாவித்த விலை உயர்ந்த சொகுசு வாகனத்தை அவர் விற்க வேண்டிய அவசியம் என்ன? உண்மையில் அதை வாங்கியவர் யார்? அவர் பாவித்த அந்த வாகனத்தை யாராவது பரிசாக அவருக்கு வழங்கியிருந்தார்களா? இப்படி பல கேள்விகளுக்கு விசாரணைகள் நடந்தால் மாத்திரமே பதில்கள் கிடைக்கும்.

# தமிழ்ப் பொது வேட்பாளர்:- பயங்களும் பதில்களும்

(1ம் பக்கத் தொடர்ச்சி) அவருடன் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் பேரம்பேச வரமாட்டார் என்பதே யதார்த்தம்.எனவே தமிழ்ப்பொது வேட்பாளர் முன்வைக்கப் போகும் கோரிக்கைகள் எவை என்பதுதான் அதைத் தீர்மானிக்கின்றது.

ஐந்தாவது காரணம் எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்ப முடியாது. எனவே தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது. உண்மை. எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்பக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் முன்வைக்கப்பட வேண்டும் என்று கேட்கப்படுகிறது.15 ஆண்டுகளாக தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு வழங்கப்பட்டன. அதை நிறுத்தி அதை தமிழ் வேட்பாளருக்கு உரியதாகத் திரும்பினால் என்ன?

எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப நான் கூறுவது போல பகிஸ்கரிப்பு ஒரு தெரிவு தான் இந்தியாவில் நோட்டா என்று தெரிவு உண்டு. அதைப் போல. ஆனால் அந்த தெரிவை முன் வைக்கும் ஒரு கட்சி அதற்காக உழைக்க வேண்டும். அந்த தெரிவை மக்கள் மயப்படுத்த வேண்டும்.அறிக்கையை விட்டுவிட்டு பேசாமல் இருக்க முடியாது. அப்படி இருந்தால் ஏனைய கட்சிகள் மக்களைப் பிழையான வேட்பாளரை நோக்கிச் சாய்த்துக் கொண்டு சென்று விடுவார்கள். அதாவது தமிழ் வாக்குகள் மீண்டும் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கிப் போகும்.தேர்தலைப் புறக்கணிப்பது ஒரு தெரிவு. ஆனால் அதற்காக உழைக்க வேண்டும். அதை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதுதான் சுதந்திரத்திற்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் செய்ய வேண்டியது.

மேற்சொன்னவற்றைத் தொகுத்துப் பார்த்தால் தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கும். தமிழ்ப்பொது வேட்பாளர் எனப்படுபவர் தமிழ்மக்களின் கூட்டு மனோநிலையின் குறியீடாக இருப்பார். அவர் தமிழ்க்கட்சி அரசியலைப் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடாது. தமிழ்மக்கள் மத்தியில் தற்போது தூண்டி விடப்படும் பிரதேச சாதி சமய பால் அசமத்துவங்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடாது.

எந்த ஒரு சிங்கள வேட்பாளரோடும் அவர் தன்னிச்சையாக டீலுக்கு போக முடியாது. ஜனாதிபதித் தேர்தல் மூலம் அவருக்கு கிடைத்த பிரபல்யத்தை அவர் அடுத்தடுத்த தேர்தல்களில் முதலீடு செய்யக்கூடாது....போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை தமிழ் மக்கள் முன் நிறுத்துவார்களாக இருந்தால் அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்குரிய கட்டமைப்புகளை தமிழ் மக்கள் உருவாக்க முடிந்தால் அது கடந்த 15ஆண்டு கால தமிழ் அரசியலில் திருப்பகரமான ஒரு நகர்வாக அமையும். இல்லையென்றால் இக்கட்டுரையில் முன் கூறப்பட்ட நோர்வீஜியத் தமிழர் கவலைப்பட்டது போல தமிழ் அரசியலில் சரியான அறிவியல் முடிவுகள் எடுக்கப்பட்ட போதிலும் அவை அரசியல் தீர்மானங்களாக மாற்றப்படாததன் ஆகப்பிந்திய விளைவொன்றை தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்

எதிர்பாருங்கள்! காத்திருங்கள்! காணத் தவறாதீர்கள்!
முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லத்தின் குழந்தைகளின் வாழ்வுக்காகவும்
கல்வி மேம்பாட்டிற்காகவும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை நடாத்தும்
13வது ஆண்டு இன்னிசை மாலையும் இராப்போசன விருந்தும்
28 யூலை 2024 ஞாயிற்றுக்கிழமை தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 960

# இந்தியத் தேர்தல் களமும் கச்சதீவு அரசியலும்



இந்தியத் தேர்தல்களம் ஈழத்தமிழருடனான உறவை எப்போதும் பயன்படுத்தும் மரபைக் கொண்டுள்ளது என்பது தெரிந்த விடயம். ஆயுதப் போராட்ட காலத்திலும் போர்க் காலத்திலும் தமிழகம் மட்டுமல்ல புதுடில்லியும் தேர்தல் களத்தை தமக்கு சாதகமாக்குவதற்கு ஈழத்தமிழர் அரசியலை பயன்படுத்தியது. அதன் உச்ச வளர்ச்சியை 2009 காலப்பகுதியில் கண்டு கொள்ள முடிந்தது. தற்போது கச்சதீவு அரசியலை மீளவும் தேர்தல் கால வியூகமாக கட்சிகள் கையாண்டு வருகின்றன.

பாரதீய ஜனதாக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லாததொன்றை தேர்தல் மேடைகளில் முதன்மைப்படுத்தும் தரங் குறைந்த அரசியலை காண முடிகிறது. ஈழத்தமிழரது அரசியலில் வாக்குகளை பெறமுயலும் தமிழக - இந்திய கட்சிகள் தேர்தலுக்குப் பின்னான நகர்வுகளில் துயரகரமான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன, இக் கட்டுரையானது இலங்கை இந்திய கடல் பகுதியின் முக்கியத்துவம் ஈழத்தமிழரது அரசியலில் எத்தகைய பங்கினைக் கொண்டுள்ளது என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது மன்னிக்க முடியாத வரலாற்றுத் தவறு என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்துள்ளாம். தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கூட்டணி தேச விரோத செயலைச் செய்யுள்ளது என்பதை நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இவ்விரு கட்சியினரும் தமிழ் நாட்டின் உயிர்நாடியான கச்சதீவைத் துண்டித்து வேறு ஒரு நாட்டிற்கு கொடுத்துள்ளனர். திரைமறைவில் செய்த வரலாற்றுத் தவறை மன்னிக்க முடியாது. அவர்கள் செய்த செயலுக்காக தமிழக மீனவர்கள் தண்டிக்கப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தேர்தல் கால பிரசாரம் மட்டுமே எனக் கடந்து செல்ல முடியாது. காரணம் இத்தகைய கடல் பகுதியே ஈழத் தமிழரது அரசியலின் இருப்பும் பலமுமாகும். கச்சதீவு மட்டுமல்ல பாக்கு நீரிணை, இராமர் பாலம் என்பன ஈழத்தமிழரது அரசியலுடன் பின்னிப்பிணைந்தது. அதனை முழுமையாக தெரிந்து கொள்வது அவசியமானது. கச்சதீவு இந்திய தேசத்தின நிலப்பரப்புக்குரியதே, கச்சதீவுடன் இராமேஸ்வரம் மற்றும் 13க்கும் மேற்பட்ட தீவுகள் தமிழகத்துடன் சேர்ந்தே இருந்தன. தமிழக இராமநாதபுர சமஸ்தானங்களுக்குரியதாகவே பிரித்தானியர் காலத்தில் காணப்பட்டது. இது 285 ஏக்கர் பரப்பளவைக் கொண்டது. தமிழகத்திலிருந்து 12 கடல்மைல் தூரத்தில் கச்சதீவு அமைந்துள்ளது. இது 1974 முதல் இலங்கை இந்திய நட்புறவினால் இலங்கைக்கு கைமாற்றப்பட்டது.

முதலாவது, தனுஸ்கோடியிலிருந்து இலங்கையின் தலைமன்னார் வரை 14.4 கடல்மைல் அல்லது 27 கிலோமீட்டர் தொலைவிலான பாக்குநீரிணையினால் இலங்கையும் இந்தியாவும் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதனை இலங்கையை கைப்பற்றி ஆண்ட அனைத்து அந்நிய சக்திகளும் சரி வர பயன்படுத்திக் கொண்டனர். இலங்கைத்தீவை தனித்துவமான கடல் சார் நலன்களுக்கான அரசாக பிரித்தானியர் முதன்மைப்படுத்திக் கொண்டனர். ஈழத்தமிழர் தமிழகத்திற்கு அண்மையில் தமது இருப்பிடத்தைக் கொண்டதனால் பாக்கு நீரிணை தொப்புள்கொடி உறவுக்கான தொடுவாயின் அடிப்படையாக அமைந்தது. இத்தகைய பாக்கு நீரிணைக் கூடாகவே சோழப் பேரரசு இலங்கைத் தீவைக் கைப்பற்றியது. 1500 ஆண்டு களுக்கு மேலாக சிங்கள ஆட்சியாளர்களால் கட்டமைக்கப்பட்ட அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டதை அழித்து பொலநறுவையை தலைநகராக மாற்றியதை சிங்கள - பௌத்தர்கள் வரலாற்றில் முக்கிய விடயமாகும்.

இரண்டாவது, இத்தகைய பாக்கு நீரிணையே ஈழத்தமிழரது ஆயுதப் போராட்டத்தின் மையப் பகுதியாக அமைந்திருந்தது. இலங்கையின் கடற்படையினால் துரத்தப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் தப்பிக்கொள்ளவும் பாதுகாத்துக் கொள்ளவும் ஆயுதங்களைக் கடத்தவும் ஆட்களை பயிற்சிக்கு கொண்டு செல்லவும் பின்னர் மீள புலத்திற்கு கொண்டு வரவும் பாக்கு நீரிணையே உதவியது.

காரணம் பாக்கு நீரிணைக்கு அப்பால் இந்திய கடற்படையின் பாதுகாப்பிற்கு உட்படுதல் என்பது ஆயுதப் போராட்டத்தின் அடிப்படையாக அமைந்திருந்தது. இலங்கையில் ஏற்பட்ட வன்முறைக் காலங்கள் முழுவதும் ஈழத் தமிழ் அகதிகள் தப்பிச் சென்றதும் பாதுகாப்பு கிடைத்ததும் பாக்கு நீரிணையினால் என்பதை நிராகரித்து விட முடியாது. அத்தகைய கடலே ஈழத் தமிழரது அரசியல் இருப்பை பாதுகாத்தது. அத்தகைய கடலை விட்டுப் பிரிந்து தனித்துவமானதாக ஈழத்தமிழ் அரசியல் பயணிக்க முயன்ற போது துயரங்களையும் அழிவுகளையும் எதிர் கொண்டது.

தமிழகத்தில் ஈழத்தமிழாது ஆயுதப் போராட்டம் தங்கியிருந்த போது போராட்டத்தின் வளர்ச்சியும் நிலைத்திருப்பும் சாதகமானதாக அமைந்திருந்தது. மூன்றாவது, தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஈழத்தமிழருக்கும் இந்தியாவுக்குமான முரண்பாட்டை திட்டமிட்டே வளர்ச்சியடையச் செய்தார்கள். இந்தியாவின் பாதுகாப்பை தமிழர்கள் கொண்டிருக்காது தடுப்பதே தென்னிலங்கை ஆட்சியாளர் களது நோக்கமாக உள்ளது. அத்தகைய முரண்பாட்டின் எதிரொலியே ஈழத் தமிழரது இருப்பு நெருக்கடிக்குள்ளாக வழிவகுத்தது. இதன்மூலம் பாக்கு நீரிணையை ஈழத்தமிழரிடமிருந்து பறித்தெடுப்பதுடன், இந்தியாவின் தயவிலேயோ ஒத்துழைப்பிலேயோ ஈழத் தமிழரது அரசியல் இயங்கி விடக் கூடாது என்பதை தென்னிலங்கைத் தரப்பினர் அனைவரும் கருத்தில் கொண்டுள்ளனர்.

நான்காவது, தென்னிலங்கை ஆட்சியாளரது இந்திய எதிர்ப்புவாதம் ஈழத் தமிழர் மீதான தாக்குதலாகவே அமைந்துள்ளது. அனைத்து வன்முறைகளுக்கும் அடிப்படையில் இந்தியா மீதான அச்ச உணர்வே காரணமாகும். அதனை முன்னிறுத்திக் கொண்டே வடக்கு, கிழக்கையும் பாக்கு நீரிணையையும் இலங்கை இந்தியக் கடற்பரப்பையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் கையாளுகின்றனர். இதனை வெற்றிகொள்ளும் வெளியுறவுக் கொள்கையையே இலங்கை ஆட்சியாளர் இந்தியா பொறுத்து பிரயோகித்து வருகின்றனர். எல்லாச் சூழலிலும் இந்தியாவை அரவணைப்பது போல் காட்டிக் கொள்வதும் ஈழத்தமிழருக்கு எதிரான கொள்கையை கடைப்பிடிப்பதுவும் மரபான வெளியுறவாகக் காணப்படுகிறது. அத்தகைய கொள்கையில் ஈழத் தமிழர் எதிர்ப்புவாதத்தை இந்தியாவுக்கு எதிரானதாக மாற்றுவதில் வெற்றி கண்டுள்ளனர். ஆனால் அதனை இந்தியாவுக்கு நேரடி எதிர்ப்புவாதமாக வெளிப்படுத்தாது ஈழத்தமிழர் ஊடாக நகர்த்துவதில் கவனம் கொண்டுள்ளனர். அதன் அடிப்படையில் ஒன்றாகவே இலங்கை-இந்திய ஒப்பந்தம் காணப்படுகிறது. இந்தியர்களுக்கும் ஈழத் தமிழருக்குமான முரண்பாட்டை உருவாக்கி வளர்த்ததில் தென்னிலங்கைச் சக்திகள் கவனம் கொண்டிருந்தனர்.

அத்தகைய முரண்பாடே ஈழத்தமிழரது இருப்பை நெருக்கடிக்குள் தள்ளியது. அதனை பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் அனைத்து தென்னிலங்கை அரசியல் சக்திகளும் முனைப்பாக உள்ளனர். அதுவே தென்னிலங்கையின் இருப்புக்குரியது மட்டுமன்றி இலங்கைத்தீவை தனித்துவமான அரச பாதுகாக்க உதவுகிறது. இத்தகைய முரண்பாட்டின் வடிவம் மகாவம்சத்திலிருந்து இன்று வரை பேணப்படுகிறது. ஏனைய காலத்தை விட ஆயுதப்போராட்டக் காலம் அத்தகைய முரண்பாட்டை வலுப்படுத்துவதில் அதிக வாய்ப்பான காலமாக தென்னிலங்கைக்கு கிடைத்தது. அதனை பயன்படுத்திக் கொண்டதுடன், தற்போதைய காலத்திலும் அதனை கடைப்பிடித்து வருவதில் முனைப்பாக இயங்குகிறது.



கட்டுரையாளர்:
இலங்கையில் இருந்து
பேராசிரியர்
- K.T.கணேசலிங்கம் -





ஐந்தாவது, சமகால கடல்சார் அரசியலில் தீவுகள் தனித்துவமானவையாக விளங்குகின்றன. தீவுகள் பாதுகாப்பான இருப்பையும் ஆட்சியையும் அதிகம் கொண்டுள்ளன. இலங்கைத் தீவாக இருப்பதே அரசாக இருப்பதற்கான அடிப்படையாகும். பாக்கு நீரிணையே இலங்கைத் தீவின் வலுவாகும். ஆனால் தற்போது பாக்கு நீரிணையின் ஒரு பக்கம் தமிழகமும் மறுபக்கம் ஈழத்தமிழரும் இருப்பது இரு மக்களது இருப்புக்கும் தனித்துவமான பாதுகாப்பானது. இதனைக் குலைப்பதே தென்னிலங்கையின் ஆவலாக உள்ளது. அதற்கான முகாந்திரங்களை உருவாக்குவதில் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் ஈடுபாடுடையவர்களாக விளங்குகின்றனர். இதனை கருத்தில் கொள்ள வேண்டிய பொறுப்பு ஈழத்தமிழருக்கும் தமிழக மக்களுக்கும் உரியதாகும். ஆரசியல் கட்சிகளும் அதன் தலைமைகளும் நலன்களுடன் மட்டுமே பயணிக்கிறார்கள். அதனால் மக்களாக விழிப்படைவது அவசியமானது. அல்லது அத்தகைய விழிப்புடைய சக்திகளை அரசியலுக்குள் கொண்டுவருதல் வேண்டும். எனவே கச்சதீவு அரசியல் தேர்தலுக்கான உரையாடலாகக் கருதினாலும் அதன் இருப்பும் அமைவிடமும் தனித்துவமானது. அதனைப் பாதுகாப்பதென்பது தமிழகத்திற்கும் ஈழத்தமிழருக்கும் உரியது. பாக்கு நீரிணையை மையப்படுத்திய கடல் பகுதியானது, ஈழத் தமிழரது அரசியல் இருப்பை பாதுகாத்தது. அதுவே ஈழத்தமிழரது அரசியல் போராட்டங்களூாக்கும் துயரங்களின் போதெல்லாம் பாதுகாப்புக்கும் உதவியது. இந்த கடற்பகுதி அந்நிய சக்திகளுக்கு உரியதல்ல. ஈழத்தமிழருக்கும் தமிழகத்திற்குமானது. இப்பகுதியின் பாதுகாப்பு இரு கடல்சார் சமூகங்களின் நலனுக்கானது. அதன் கேந்திர முக்கியத்துவம் அந்த மக்களது நலனைப் பாதுகாப்பதற்கானதே, அதனை நோக்கி அரசுகள் நகர வேண்டும்.




# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! தடைபட்டு வந்த காரியங்கள் தடை நீங்கி சாதகமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.. உடல் நலம் சீரடையும். மற்றவர்களுடன் இருந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த தடைகள் நீங்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக நடக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்





ரிஷபராசி அன்பர்களே! வீண் மனகுழப்பம் ஏற்பட்டு நீங்கும். ஆன்மிக எண்ணம் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் இழுபறியான நிலை காணப்படும். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வியாபாரத்தில் கூடுதல் லாபம் பெற முடியும். உத்யோகத்தில் கூடுதல் பணிச்சுமையும், வீண் அலைச்சலும் உண்டாகும். சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. குடும்பத்தினருடன் சில்லறை சண்டைகள் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் குறித்த காலத்தில் வெற்றி பெறும். மனம் ஒருநிலைப்படும். கவுரவம், அந்தஸ்து உயரும். எதிர்பார்த்த உதவிகள் மற்றவர்கள் மூலம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் மந்தமானபோக்கு காணப்பட்டாலும் பணவரத்து குறைவு இருக்காது.தொழிலில் கூட்டாளிகளுடன் அனுசரித் செல்வது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கவனமாக பணிகளை கவனிப்பது நல்லது.




கடகராசி அன்பர்களே! மனோ தைரியம் அதிகரிக்கும். எல்லா காரியங்களும் சாதகமாக நடந்து முடியும். எல்லா இடங்களிலும் மரியாதையும், கவுரவமும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். கடன் பிரச்னை தீரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகத் திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்கும்.





சிங்கராசி அன்பர்களே! மன குழப்பம் நீங்கும். மற்றவர்களிடம் பழகும் போது கவனமாக இருப்பது நல்லது. சமூகத்தில் கவுரவம் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி அவற்றை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். உத்யோகத்தில் மேலதிகாரிகள் கொடுத்த வேலைகளை கவனமாக செய்து முடித்து பாராட்டு பெறுவர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சிறப்படையும். புதிய ஆர்டர்கள் கிடைக்க பெறுவீர்கள். வியாபார வளர்ச்சிக்கு இருந்த தடைகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். அரசாங்கம் தொடர்பான விஷயங்கள் சாதகமாக முடியும். உத்யோகத்தில் பதவி உயர்வு உண்டாகும். நீண்ட தூர பயணங்களால் காரிய அனுகூலம் உண்டாகும். பணியாளர்கள் உதவியும் கிடைக்கும்




துலாம்ராசி அன்பர்களே! சுபச் செலவுகள் கூடும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். துணிச்சல் உண்டாகும். எதை பற்றியும் முன்பின் யோசிக்காமல் செயல்களில் இறங்கி விடுவீர்கள். தேவையற்ற இடமாற்றம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும்.





விருச்சிகராசி அன்பர்களே! மன நிம்மதி கிடைக்கும். புத்திசாதுர்யம் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். புதிய ஆர்டர்கள் பெறவும், வாடிக்கையாளர்களை திருப்தி செய்யவும் அலைய வேண்டி இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களுக்காக பொறுப்புகள் ஏற்கும் போது மிகவும் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நன்மை தரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.








தனுசுராசி அன்பர்களே! மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வாக்கு வன்மையால் எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பணியாட்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகரிக்கும். இயந்திரங்களை இயக்குபவர்கள் கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் மகிழ்ச்சியும், குதூகலமும் ஏற்படும்.




மகரராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். துணிச்சலுடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டு செயல்படுத்துவது வளர்ச்சிக்கு உதவும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு துணிச்சல் அதிகரிக்கும். எதை பற்றியும் கவலைப்படாமல் வேலையில் வேகம் காட்டுவீர்கள். முக்கிய முடிவுகள் எடுக்கும் போது அவசரப்படாமல் இருப்பது நல்லது. தன்மையாக பேசுவது நல்லது.




கும்பராசி அன்பர்களே! சுபச் செலவுகள் உண்டாகும். வியாபாரம் தொடர்பான கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தேவையற்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அடுத்தவர்களுக்கான பொறுப்புகளை ஏற்கும் போது எச்சரிக்கை தேவை. குடும்பத்தில் ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.




மீனராசி அன்பர்களே! எல்லாவிதமான முன்னேற்றமும் ஏற்படும். பயணங்களால் லாபம் உண்டாகும். மனதில் இருந்த குழப்பம் நீங்கும். புதிய நண்பர்களின் நட்பு கிடைக்கும். நீண்ட தூரத்தில் இருந்து வரும் தகவல்கள் நல்ல தகவல்களாக இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்றம் அடையும். புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு செயல்திறன் அதிகரிக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# வங்குரோத்து நாட்டை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகள்

(19ம் பக்கத் தொடர்ச்சி) உறவினர்களின் வீடுகளில் தங்குவதை விடவும் சுற்றுலா விடுதிகளில் தங்குவதை அவர்கள் விரும்பக் காரணம் என்ன? மிகவும் துயரமான ஒரு காரணம் உண்டு. உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்கும் பொழுது உறவினர்களும் நண்பர்களும் இவர்களிடம் எதையாவது எதிர் பார்க்கின்றார்கள். அவர்கள் எதிர்பார்ப்பதை இவர்கள் கொடுக்க முடியாத போது அல்லது இவர்கள் கொடுப்பது அவர்கள் எதிர்பார்த்ததை ஈடு செய்யாத போது அங்கே அதிருப்தி உண்டாகிறது. அதனால் மனக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. விடுமுறைக் காலத்தை தாய் நாட்டில் சந்தோஷமாகக் கழிப்பதற்கு என்று வரும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் மேற்சொன்ன காரணத்தால் தமது விடுமுறை நாட்கள் மன அழுத்தம் மிக்கவைகளாக மாறின என்று குறைபடுகிறார்கள்.

மேலும் அங்கிருந்து வரும் முதலாம் தலைமுறை புலம் பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்த வரை பெரும்பாலானவர்களுடைய பெற்றோர் இப்பொழுது உயிரோடு இல்லை.எனவே பெற்றோரோடு தங்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவர்களுக்குக் குறைவு. மேலும் பிள்ளைகள் வளர்ந்து விட்டன. தங்கப் போகும் வீடுகளிலும் பிள்ளைகள் வளர்ந்து விட்டன. ஒரு குறுகிய காலத்துக்குள் எல்லாரையும் உள்வாங்கும் அளவுக்கு உள்ளூர் வீடுகளின் அறைகள் போதாமல் இருக்கலாம். மேலும், வெளிநாட்டில் வளர்ந்த பிள்ளைகள் ஏசி அறைகளைக் கேட்கிறார்கள். அதுவும் புலம் பெயர்ந்த தமிழர்கள் சுற்றுலா விடுதிகளில் தங்குவதற்கு ஒரு காரணம். இது போன்ற காரணங்களால் சுற்றுலா விடுதிகளுக்கு வருமானத்தை ஈட்டும் ஒரு தரப்பினராக புலம் பெயர்ந்த தமிழர்களும் மாறி வருகிறார்கள்.

எதுவாயினும் நாட்டுக்குள் வெளிநாட்டுக் காசு வருகிறது. பன்னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயங்கும் ஓர் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அது ஒரு வரப்பிரசாதம். அது நாட்டின் டொலர் கையிருப்பைக் கூட்டுகின்றது. அது போலவே வெளிநாட்டுக்குச் சென்ற தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் அனுப்பும் காசும் நாட்டின் டொலர் கையிருப்பை அதிகப்படுத்துகிறது. அண்மைக் காலங்களில் 10பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளி நாடுகளில் தொழில் புரிவோர் அனுப்பியிருப்பதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இவை தவிர அரசாங்கம் வரிகளை உயர்த்தியிருக்கின்றது. மின்சாரக் கட்டணம் தொலைதொடர்புக் கட்டணம் போன்ற உள்ளூர்ச் சேவைக் கட்டணங்களை அதிகப்படுத்தியுள்ளது. இவற்றால் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கின்றது. இவை போன்ற பல காரணங்களினாலும் நாட்டின் பொருளாதாரம் ஒப்பீட்டளவில் நிமிர்த்தப்படுகிறது என்று ஓர் உணர்வு ஆங்கிலம் தெரிந்த படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் ஏற்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு பச்சை மிளகாய் ஒரு கிலோ 2000 ரூபாய்க்கு மேல் போனது.ஆனால் இப்பொழுது உள்ளூர் சந்தைகளில் 100 ரூபாய்க்கு சற்று அதிகமாகப் போகின்றது. அப்படித் தான் தக்காளிப் பழம் பெரியது ஒரு கிலோ 800 ரூபாய்க்கு மேல் போனது. இப்பொழுது 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை போகின்றது.

மரக்கறி விலை குறைகிறது. கடல் உணவுகளின் விலையும் குறைக்கின்றது. அரசாங்கம் சாதாரண சிங்கள மக்களைக் கவரும் நோக்கத்தோடு நெத்தலிக் கருவாடு, சீனி,பருப்பு போன்றவற்றின் விலைகளை அவ்வப்போது குறைத்து வருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் பொழுது மேலும் பல சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்காக ரணில் விக்கிரமசிங்க கடுமையாக உழைக்கின்றார். அவர் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக வருவதை மேற்கு நாடுகள் விரும்புகின்றன. பன்னாட்டு நாணய நிதியம் போன்ற உலகப் பெரு நிறுவனங்களும் விரும்புகின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தலை நோக்கி அவர் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு மேற்படி தரப்புகள் அவருக்கு உதவும்.

எனினும் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் என்று கூறப்படுகின்றவை சாதாரண சிங்கள மக்களைச் சென்றடைந்தனவா என்ற கேள்விக்கு விடை முக்கியம். ஏனெனில் ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்குரிய பிரதான வாக்காளர்கள் சிங்களக் கிராமங்களில்தான் இருக்கிறார்கள். சிங்கள பௌத்த அரசியலின் வாக்கு வங்கியின் இதயம் கிராமங்களில்தான் உண்டு. கிராமப்புற வாக்காளர்கள் அரசாங்கத்தைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதுதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கப் போகின்றது.

# இந்தியாவின் பாதுகாப்பு....

(16ம் பக்கத் தொடர்ச்சி) ஆயுதங்களின் தேவை குறைந்துள்ள போதும், மூலோபாயப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான, ஆயுத தளபாடங்களின் அவசியம் குறையவில்லை. குறிப்பாக இலங்கையை சுற்றியுள்ள இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கடல்சார் கண்காணிப்புத் திறன் அவசியப்படுகிறது. அதற்காக அமெரிக்கா, சீனாவைப் போலவே இந்தியா ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல்களை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது. டோனியர் விமானங்களையும் இந்தியா வழங்குகிறது. இதன் ஊடாக இலங்கையுடன் பாதுகாப்பு இராஜதந்திரத்தை பேணுகிறது. பாதுகாப்பு உறவுகளை வலுவான நிலையில் வைத்திருக்க முனைகிறது. இப்போது இந்தியா தனது பாதுகாப்பு தளபாடங்களை நவீனமயப்படுத்தி வருகிறது. அவற்றை ஏற்றுமதி செய்வதிலும் அதிக ஆர்வம் கொண்டுள்ளது. இந்தியா இப்போது, 2.6 பில்லியன் டொலர்கள் வரை, பாதுகாப்புத் தளபாடங்களை ஏற்றுமதி செய்கிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில், பாதுகாப்பு ஏற்றுமதி 10 மடங்கு அதிகரித்திருக்கிறது.

இப்போது இந்தியா தனது பாதுகாப்புத் தளபாடங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்றாக இலங்கையை மாற்ற விரும்புகிறது. இதற்குள் சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் குறுக்கிடக் கூடாது என்று எதிர்பார்க்கிறது. அதற்காகவே ஆண்டு தோறும் இந்திய பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களின் திறன் களை விளக்கும் கருத்தரங்குகளை நடத்துகிறது, அத்துடன், இலங்கையின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளை அவ்வப்போது இந்தியாவுக்கு அழைத்துச் சென்று தங்களின் ஆயுத தளபாடங்களின் திறன்களை வெளிப்படுத்துகிறது. ஆனால், இந்தியாவுடன் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கு இலங்கை உறுதியாக இருந்தாலும், இந்தியாவின் பாதுகாப்புத் தளபாடங்களை நம்பியிருக்கும் நிலையில் இலங்கை இல்லை என்பதே உண்மை.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com













# காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளில் சிறிய முன்னேற்றமும் ஏற்படவில்லை -அமெரிக்கா



2023இல் இலங்கையில் அரசாங்கத்தின் அதிகாரிகள் சார்பில் எவரும் காணாமல் போகச் செய்யப்பட்டதாக அறிக்கைகள் எவையும் கிடைக்கவில்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளதுடன் ஒக்டோபர் இறுதிவரை எவரும் காணாமல் போகச் செய்யப்பட்டதாக தனக்கு அறிக்கைகள் எவையும் கிடைக்கவில்லை என காணாமல்போனோர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. 2023 இல் உலக நாடுகளில் மனித உரிமை நிலவரம் குறித்த தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது.

1983ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை இடம் பெற்ற மனித உரிமை துஸ்பிரயோகங்கள் தொடர்பிலான விசாரணைகளில் சிறிதளவு முன்னேற்றம் இல்லை அதேபோல 1988-89 ஜேவிபி கிளர்ச்சிகாலத்தில் இடம்பெற்ற மனித உரிமை துஸ்பிரயோகங்கள் குறித்த விசாரணைகளிலும் எந்த முன்னேற்றமும் இல்லை என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதிகளவில் கவனத்தை ஈர்த்த காணாமல் போன சம்பவங்கள் குறித்த விசாரணைகளிலும் முன்னேற்றம் இல்லை எனவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னாள் கடற்படை தளபதி வசந்த கராணகொட தொடர்புபட்ட 2008 2009 இல் கொழும்பில் 11 தனிநபர்கள் கடத்தப்பட்டு காணாமல்போன சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

எனினும் மனித உரிமை மீறல்கள் குற்றச்சாட்டுகளுடன் தொடர்பு பட்ட காரணங்களிற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடமேல்மாகாண ஆளுநர் பதவியிலிருந்து கரணாகொடவை நீக்கினார் என அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ். புங்குடுதீவில் கட்டடம் அமைப்பதற்காக தோண்டப்பட்ட குழியில் இருந்து மனித எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளது. புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள சதானந்த சிவன் ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகள் இடம் பெற்று வரும் நிலையில் அங்கு கட்டடம் அமைப்பதற்காக குழி தோண்டிய வேளை குழிக்குள் இருந்து மனித எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது.

கடந்த 1985 ஆம் ஆண்டு, நெடுந்தீவு குமுதினி படகில் கடற்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட இருவரது சடலங்கள் இப்பகுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் உரிய பகுப்பாய்வுகளுக்கு பின்னரே அதன் உண்மைத் தன்மை பற்றி உறுதியாக கூற முடியும் என சம்பந்தப்பட்ட தரப்புக்களில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

